பாலர் கல்வி

தொகுதி 6	1941 ஷ நவம்பர் மீ விஷு ஷ கார்த்திகை மீ	பகுதி 8

தாய்மொழி கற்பித்தல்

M. Subramaniam, L. M. C., High School, Shiyali.

IV. வாய்மொழி பயிற்சியும்—பேசுதல் பழக்கமும்

குழந்தைகளும் — பேச்சும்.

கண்களால் எழுத்தைப் பார்த்துப்படிப்பதற்கு முன் ஒரு பொருளைப்பற்றி காதுகளால்கேட்டு, வாயால்தாராளமாகப்பேச குழந்தைகள் பள்ளிக்கூடம் போவதற்கு முன் கற்றுக்கொள்கின்றன. நாம் அவர்களுடைய உற்சாகத்தை அடக்காமல் அவர்கள் இஷ்டம்போல் பேச விட்டால், எவ்வளவோ விஷயங்களை அவர்கள் கேட்டபடியும், உணர்ந்த மாதிரியும் சொல்ல ஆவலாக இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் பெற்றோரிடத்திலும், அறிமுகமான பிறரிடத்திலும் தங்கள் கருத்துக்களை விளையாட்டாகவும் தாராளமாகவும் உண்மைக்கு மாறில்லாமலும் வெளி இடுகின்றார்கள். இந்த நிலையில் அவர்களுடைய பேச்சில் கவிதைத் தன்மை நிறைந்துள்ளது என்றே நினைக்கவேண்டும். எதை மறக்கவேண்டும், எதை விரித்துச் சொல்லவேண்டும் எதைச் சுருக்கிக் கூறவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாது. பிழையுள்ளது இன்னதென்றும், குற்றமற்றது இன்னது என்றும், அவர்களுக்குத் திட்டமாகத் தெரியாதாகையால் அவர்கள் எதையும் பேசக்கூடும். மேலும் அவர்கள் பேசும் பேச்சில், அவர்கள் வாழும் வீட்டு நிலைமையின் தன்மை, சுற்றுப்புற சம்பந்தங்கள் முதலியனவும் நிறைந்திருக்கின்றன. அவர்களுடைய மொழி கொச்சையாக இருக்கலாம், பிறர் அனுபவங்களைத் தங்கள் அனுபவம்போல் பாவித்து

ஒன்றை எடுத்துப் பேசலாம்: இவ்விதப்பேச்சை அசட்டை செய்யலாம் ஆதாரமாகக்கொண்டு ஆசிரியர்கள் சிறு பிள்ளைகளுடைய தாய்மொழி வளர்ச்சியை கவனிக்கவேண்டும்.

பேசுதல் பழக்கமும் — ஆசிரியரின் நோக்கமும்.

குழந்தைகள் எப்போதும் இயற்கையாகவே பேச ஆசைப்படுகின்றார்கள். இதை ஒருபோதும், ஆசிரியர்கள் அடக்கி அமுத்திவிடக்கூடாது. குழந்தைகள் தாங்கள் சொந்தமாக அடைந்த சிறு அனுபவங்களையும், கண்டபொருட்களையும், தெரிந்துகொண்ட விஷயங்களையும், தங்கள் தாய்மொழியில், சுலபமாகவும், திருத்தமாகவும், தெளிவுடனும் உற்சாகத்தோடும் பிறருக்குத் தாராளமாகச்சொல்ல ஆசிரியர்கள் அவர்களைப் படிப்படியாகப் பழக்குவிக்கவேண்டும். அறியாத தன்மையால் குழந்தைகள் தாங்கள் செய்வது சரி என்று நினைக்கின்ற மனப்பான்மையை உள்ளவர்களாதலால், இதை வெகு யுக்தியாகவும் ஜாக்கிரதையோடும் அகற்றுவிக்க ஆசிரியர்கள் முயலவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் தங்கள் இஷ்டம்போல் பேசி மொழி நயத்தைக் கெடுத்துக்கொள்வார்கள். இவர்கள் இலக்கணப் பிழையின்றி பேசவும், பொருத்தமும் அழகும் நிறைந்த சொற்களை உபயோகிக்கவும், ஆசிரியர்கள் முதலில் எதிர்பார்க்க முடியாது. தாராளமான பேச்சையே எதிர்பார்க்க வேண்டும். மேலும் குழந்தைகளுடைய பௌருஷ விருத்தி, தனித்தன்மை (**Personality and Individuality**) ஆகிய இவற்றை வெளியாக்குவது பேசும் வன்மை யாதலாலும், அவர்கள் தங்கள் பிற்கால வாழ்க்கையில் அழகுபெற எழுதும் கட்டுரைக்கு அடிப்படையாக உள்ளது திட்டமான பேசும் சக்தியே யாதலாலும், ஆசிரியர் முதலிலிருந்து இவ்விசேஷ குணங்கள் அமையும்படி பேச்சை சீர்திருத்தவேண்டும். சுய சக்தி, கற்பனைத்திறமை, தெளிவு, எளிமை, வன்மை, முதலிய திறமைகள் பிள்ளைகளுடைய பேச்சில் காணப்படின் ஆசிரியர் இவற்றை விருத்தியாக்கவேண்டும். இனிப் பள்ளிக்கூட முதல் கல்லூரி இறுதியாகக் கல்வி கற்கும் மாணவர்களின் பேச்சுத்திறமையை எப்படி விருத்தியாக்குவது?

சம்பாஷணையின் முதற்படி.

பெரியோர்களும் சிறியோர்களும் குழந்தைகளும், தங்களைப்பற்றியும், தங்கள் பொருட்களைப்பற்றியும் அதிகமாகப்பேசவோ கேட்கவோ விரும்புகிறார்கள். ஏனென்றால் இவ்விஷயங்களில், உற்சாகம், அனுபவம், பழக்கம் முதலியன நிறைந்திருப்பதோடு, சொற்களும் தாராளமாக வரக்கூடும். குழந்தைகள் தங்கள் உடல், அவயவங்கள், உண்டி, உடை, விளையாட்டு, பிரிய ஜந்துக்கள், இவற்றைப்பற்றியும், தாய், தந்தை, உறவினர் முதலியோர்களைக் குறித்தும், சுற்றுப்புறத்தில் இருக்கும் தாவரம், பிராணிகள் இயற்கைத்தோற்றம் முதலியனவற்றையும் குறித்து வெகு நன்றாக

வும், யாதொரு தடையுமின்றி பேசக்கூடும். இப்படிப் பேசும்போது சுலபமான பண்புச் சொற்களையும், வினை முதலிய இதர சொற்களையும் உபயோகிக்கக்கூடும். இதை முதற்படியாக் கொண்டு ஆசிரியர்கள் குழந்தைகளின் உற்சாகத்தைத் தூண்டி அவர்களுடைய சம்பாஷணையை விருத்தியாக்கவேண்டும்.

விசேஷ சம்பவங்களும் பேசுதல் பழக்கமும்.

ஏதாகிலும் ஓர் அதிசயமான சம்பவம் உண்டானால் அதைப் பற்றி வெகு ஆவலோடு சிறுவர்கள் சம்பாஷணை செய்யக்கூடும். ஒரு தீ விபத்து, இடி, மின்னல், புயல்காற்று, அதிக மழை, பெரு வெள்ளம், முதலியனவும், ஆகாயத்தில் விமானம் பறத்தல், ரெயில் வண்டித் தொடர், மோடார் வண்டி, கட்டை வண்டி இவற்றைப்பற்றின சம்பவங்களும் பிள்ளைகளின் மனத்தைப் பலமாகத் தாக்குகின்றபடியால் அவர்கள் இவற்றைக்குறித்து ஆவலோடு பேசக்கூடும். மேலும், குரங்கு, கரடி, மலைப்பாம்பு, இவைகளை ஊருக்குள் கொண்டு வந்து விளையாட்டு காட்டும் ஆட்களுடன் விடாமல் சுற்றித் திரிந்து சந்தோஷ மடைகின்றார்கள். இதைப்பற்றிச் சற்று வகுப்பில் சொல்லவேண்டியது தான் தாமதம்: உடனே பிள்ளைகள் அதிக உற்சாகத்தோடுபேச முன் வருகின்றார்கள். விசேஷ பண்டிகை, உற்சவம், திருநாள், ஆகிய இவையும், பிள்ளைகளைப்பேசத் தூண்டுகின்றன.

A. ஆரம்ப வகுப்புக்களில் பேசும் பழக்கம்.

ஆரம்ப வகுப்புக்களில், தாய்மொழி, சரித்திரம், பூகோளம், கதைகள், முதலியன, பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன. இவைமேல் வகுப்புக்களில் எப்படிப் பரீக்ஷை சம்பந்தமான நோக்கத்தோடு போதிக்கப்படுகின்றனவோ, அவ்வாறே கீழ் வகுப்புக்களிலும் கற்பிக்கப்படுகின்றன. இது சரியன்று. ஆரம்ப வகுப்புக்களில் பரீக்ஷை நோக்கத்தை உத்தேசித்து, ஆசிரியர்கள், தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பித்தாலும், பேசும் பழக்கத்தையும், வாய்மொழி பயிற்சியையும் ஒருபோதும் மறக்கக்கூடாது. கேள்விகளைக் கரும்பலகையில் எழுதி அவற்றிற்குப் பதில் எழுதும்படி பிள்ளைகளைச் சொல்வதற்குப்பதிலாக, வாய்மொழியாகவே, எல்லாவற்றையும் சுத்தமாகவும், பிழையில்லாமலும், சொல்லும்படி ஆசிரியர்கள் கருத்துள்ளவர்களாக இருக்கவேண்டும். நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பங்கு வாய்மொழி பயிற்சியும், சம்பாஷணை முறையும், அனுசரித்தால் பேசும் பழக்கமும் திருத்தமான உச்சரிப்பும், வாசாலகமும், பிள்ளைகளுக்கு உண்டாகும். பிள்ளைகளுக்கு ஒரு விஷயத்தைச் சுருக்கமாக எழுதத்தெரியாது. விரிவாகப் பேசுவார்கள். விஷயபாகம் எப்படி இருப்பினும், திருத்தமான பேச்சும், அழகான உச்சரிப்புமே பிரதானம். மேலும் ஆரம்ப வகுப்புப் பிள்ளைகள் சிறுபிராயமுள்ளவர்கள் அவர்களுடைய சொந்த அனுபவமும் குறை

வானது. பிறர் சொல்வதைக்கேட்டு அதை அனுகரணம் செய்கின்றூர் கள். ஒன்றைச் சொல்லும்போதும், விரிவாகப் பேசும்போதும், அதிக உற்சாகத்தோடு, கண், கை, முதலியவற்றைத் தக்கபடி ஜாடை காட்டி, தங்கள் முழு உணர்ச்சியையும், உணர்த்துகிறூர்கள். இந்தச் சந்தர்பத் தில் அவர்களோடு சம்பாஷணையிலும், வாய்மொழி பயிற்சியிலும், கலந்து கொள்வது உசிதமாகும். இதனல், பேசும் பழக்கமும், தாய் மொழி விருத்தியும் ஆகும்.

கைவேலையும்—பேசுதல் பழக்கமும்.

குழந்தைகள் எப்போதும் ஒன்றைச் செய்வதில் அதிக ஆவலாக இருக்கின்றூர்கள், கைவேலையில் எப்போதும் விருப்பம் கொள்கிறூர்கள். அவர்கள் செய்யும் பொருட்களையே பொருட்பாடமாகக் கொண்டு அவர் களோடு ஆசிரியர்கள் சம்பாஷணை செய்தால், அவர்கள் வெகு உற்சாகத் தோடு பேச முன் வருகின்றூர்கள். பிள்ளைகள் கைவேலை செய்து கொண் டிருக்கும்போது ஆசிரியர்கள் சற்று விலகி நின்று கொண்டு கவனித்தால் அவர்கள் வெகு தாராளமாகவும் ஒருவருக்கொருவர் அளவளாவியும் பேசிக்கொண்டு குதூகலத்தோடு இருக்கின்றதைப் பார்க்கலாம். இப் பேச்சு, வீண் பேச்சல்ல. கைவேலையைப் பற்றின பேச்சே ஆகும். எல் லாரும் ஒரே விதமான பொருளைச் செய்தால், ஒருவன் மற்றொருவனைப் பார்த்து தன் அபிப்பிராயத்தை வெளியிடக்கூடும். சிறுவர்கள் தங்கள் கண்களால் பார்க்கும் வித்தியாசத்தை, உடனே பேசிவிடுகின்றூர்கள். இதனல் அவர்களுடைய வாதாடும் சக்தியும் அதிகரிக்கின்றது. சாதா ரணமாகத் தினசரி வாழ்க்கை சம்பந்தமான பொருட்களையும், பிராணி, பறவை முதலியவற்றையும் கைவேலைப் பொருளாகச் செய்ய பிள்ளைகள் ஆசைப்படுகின்றூர்களாகையால், அவற்றைப் பற்றிப் பேசவும் இஷ்டப் படுகிறூர்கள். எனவே கைவேலை தாய் மொழி விருத்திக்கும் பேசும் பழக்கத்திற்கும் தக்க கருவியாயிருக்கிறது. அதை ஆசிரியர் ஆதாயப் படுத்திக் கொள்ளவேண்டும்.

பாட்டும்—பேச்சும்.

பேச்சைக் காட்டிலும் பிள்ளைகள் பாட்டு பாடுவதில் அதிக உற் சாக முள்ளவர்களாக இருக்கின்றூர்கள். அபிநயப் பாட்டு பாடுவதிலும், அதற்குத் தக்கவாறு தாளம்போட்டுக்கொண்டு ஆடுவதிலும், குழந்தைக ளுக்கு இருக்கும் சந்தோஷம் வரம்பற்றதோடு, வேறுயாரிடத்திலும் காணவும் முடியாது. குழந்தைகளுடைய அனுபவத்தை ஒட்டிய பாட்டு களையும் அவர்கள் செயல்களை விளக்கும் பாட்டுகளையும், அவர்களுக்கு அறிமுகமான சாதாரண பிராணிகளைப் பற்றிய பாட்டுகளையும், இன் னும் சந்தம், மோனை, எதுகை, ஆகிய இவை நிறைந்த பாட்டுக்களையும், தகுந்த சுலபமான இசையில் அமைத்து, அவர்களை மனப்பாடம் செய்யச் சொன்னல் மொழிவளர்ச்சியோடு வாய்த்திறனும் அதிகமாகும். இப்

பாட்டுகளில் அடங்கிய விஷயத்தைப்பற்றி பேசவும்; அவர்களை ஆசிரியர்கள் தூண்டவேண்டும். முடுக்கான இசை அமைந்த பாட்டுகளையும் வீரச் செயல் சம்பந்தமான பாட்டுகளையும் காப்பியக் கதைப் பாட்டுகளையும் சற்று பெரிய பிள்ளைகள் விரும்புவார்கள்.

நாடகமும்—பேச்சும்.

சிறு பள்ளிக்கூட முதல் பெரிய கல்லூரி கடைசியாக, மாணுக்கர்களின் மொழிவளர்ச்சிக்கு மிகச் சிறந்த ஒரு கருவி நாடகமாதலால் அதை வெவ்வேறு விதங்களில் பிள்ளைகளின் மனோநிலைக்குத் தக்கபடி ஆசிரியர்கள் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். பாட்டு, வசனம், நடிப்பு ஆகிய இம்மூன்றும் பிள்ளைகளின், உற்சாகம், உணர்ச்சி, பேசும் திறமை இவற்றை அதிகரிக்கின்றன. ஆகையால், அவர்களின் அனுபவத்திற்கு ஒட்டிய சில சுலபமான சிறுகதை நாடகங்களையும், அழகான காக்ஷிகள் அடங்கிய அங்கங்களையும், பொறுக்கி எடுத்தோ தயாரித்தோ பிள்ளைகளை நடிக்கும்படி ஆசிரியர்கள் உற்சாகப்படுத்தவேண்டும். விநோதக்கூத்து, கேலிக்கூத்து, ஓர் அங்க நாடகம் முதலியன (Interludes) பிள்ளைகளின் நடிப்புத்திறமை, பேசும் சக்தி, இவற்றை விருத்தியாக்கி, பிறரை நகைக்கச் செய்யும்படியான கலைத்திறமையையும் உண்டாக்கும்.

கதைகளும்—பேசும் பழக்கமும்.

குழந்தைகள் கதைகளைக் கேட்கவும் அவற்றை அதிக உற்சாகமாகச் சொல்லவும் வெகு ஆசையாக இருக்கின்றார்கள். கற்பனைக் கதைகள், மாயாவிநோதக் கதைகள், துணிகரச் செயல் சம்பந்தமான கதைகள், பீமன், அனுமான், குண்டோதரன், சூரபத்பன், இராவணன், முதலியோரைப்பற்றிய கதைகள், சரித்திர சம்பந்தமான கதைகள் ஆகிய இவை, நகைச் சுவை, உணர்ச்சி தன்மை, முதலியவற்றைத் தருவதோடு, பல சொந்த சரக்கையும் சேர்த்துக்கொள்ள இடம் தருகின்றபடியால், இவற்றை வெகு நன்றாக வாய்மொழி பயிற்சிக்கு ஆசிரியர்கள் உபயோகப் படுத்தலாம், ஒரு மாணுக்கன் மற்றொருவனுக்கு முழுக்கதையையும் சொல்லலாம். ஆசிரியர் சொன்னதைக் கேட்ட மாணுக்கர்கள், அவர் சொன்ன மாதிரியோ, சொந்த கற்பனைகளையும் சேர்த்தோ, சொல்லலாம். கதைகளை வெவ்வேறு பாகமாக்கி ஒவ்வொரு பிள்ளையும் ஒரு பாகத்தைப் பற்றிப் பேசும்படி செய்யலாம். கதையில் அடங்கியுள்ள விஷயத்தை நினைப்பூட்ட சொற்களை மாத்திரம் கொடுத்துவிட்டு மீதி பாகத்தை பிள்ளைகளையே பூர்த்திசெய்ய, ஆசிரியர்கள் உதவியாக இருக்கலாம். முதன் முதல் ஆசிரியர்கள் ஒரு நல்ல கதையைச் சொல்லி, பின்பு ஒவ்வொரு மாணுக்கனையும், ஒரு வாக்கியம் சொல்லும்படி, முழுவகுப்புக்கும் தக்க சந்தர்பம் தரலாம். ஒருவன் சொன்னது பிசகாக இருந்தால், மற்றொருவனைக்கொண்டு அதைத்திருத்தலாம். சிலர் கதைகளின் தலையங்கத்தையும், வேறு சிலர், அவற்றின் நீதியையும் எடுத்துச் சொல்ல

கேள்வி கேட்கலாம். சிலரை கதையின் கருத்தைச் சில வாக்கியங்களால் விளக்க, ஆசிரியர் கேட்கலாம், வேறு சிலரை ஒரு சிறு பாகத்தை விவரித்துச் சொல்லவிடலாம். இப்படிப் பல முறைகளால், தாய்பாஷையில் பேசும் பழக்கத்தை உண்டாக்கலாம்.

படங்களும் பேசுதல் பழக்கமும்

பிள்ளைகளோடு சம்பாஷணை செய்ய படங்களும் ஒரு சிறந்த சாதனமாகும். ஆனால் படங்களின் தன்மை பிள்ளைகளின் அறிவுக்கும், வயதிற்கும், புத்திக்கும், தக்கவாறு இருக்கவேண்டும். எப்போதும் பொருட்களும், ஜனங்களும், பிராணிகளும், தாவரமும், பிள்ளைகளுக்கு அறிமுகமாக இருந்தால்தான், நல்லது. அம்மாதிரியே இவற்றை ஒட்டிய படங்களும் அறிமுகமாகவே இருக்கவேண்டும். இல்லாவிட்டால் படங்களில் அதிக விருப்பம் சிறுவர்களுக்கு ஏற்படாது. விருப்பம் இல்லாவிட்டால் பேச்சும் அதிகம் வராது. எனவே பிள்ளைகளுக்குத் தக்க படங்களையும் சித்திரங்களையும் கொண்டு அவற்றில் அடங்கி இருப்பதைப்பற்றி கேள்வி கேட்டோ வேறுவிதமாகவோ மாணுக்கர்களோடு சம்பாஷிக்கலாம். கதைகளின் சிற்சில பாகத்தை படங்களால் விளக்கிக்காட்டி, அதைப்பற்றி வகுப்பில் பேசலாம். பிராணிப்படங்கள், கதைப் படங்கள் கிராம இயற்கைப் படங்கள், பிள்ளைகள் வசிக்கும் சுற்றுப்புற நிலைமையை விளக்கிக்காட்டும் காக்ஷிப் படங்கள், சிறந்த ஓவியங்கள் முதலியவற்றைக் கொண்டுவந்து, பிள்ளைகள், அவற்றை உற்று நோக்கும்படி செய்து பின்பு ஆசிரியர்கள், படிப் படியாகக் கேள்வி கேட்கவேண்டும். சில படங்களைப் பற்றி பிள்ளைகளே தாராளமாகப் பேசுவர்களாகையால் அதை நாம் தடுக்கக்கூடாது. ஆனல் திருத்தமான மொழியிலேயே சொல்லும்படி பிள்ளைகளுக்கு உணர்த்தவேண்டும். அழகிய பூந்தோட்டம், பட்சிகள், நீரோடைகள், மலைகள், காடுகள், சூரிய உதயம், சந்திர உதயம், மேகம் நிறைந்த வானம், அந்திமாலை, சூரியாஸ்தமனம், விண்மீன் கூட்டம்; நீலக்கடல் ஆற்றங்கரையோரம், நெல்வயல் முதலிய இயற்கைப் பொருட் படங்கள், சிறுவர்களின் மனத்தைக் களிக்கச் செய்து, அவர்களுடைய கற்பனைத் திறமைகளைத் தூண்டுகிறபடியால், இவ்விதமான படங்களைச் சற்றுவயது முதிர்ந்த பிள்ளைகளுக்குக் காட்டி சம்பாஷிக்க வேண்டும். இப்படிச்செய்தால் அவர்களுடைய சொல்வளப்பம் பெருகுவதோடு, அழகாகப்பேசும் திறமையும், கற்பனைசக்தியும் விருத்தியாகும்.

கலாசாலைக் கூட்டங்களும்—பேசுதலும்

படங்கள், விளையாட்டு, கைவேலை, நாடகங்கள், கதைகள் இவை பேச்சுக்கு அளிப்பதுபோல கலாசாலை கலா கூட்டங்களும், (**Literary Association**) விவாதிக்கும் கூட்டங்களும் (**Debating Society**) மாணவர் சங்கங்களும், மாணுக்கரின் பேசும் திறமையை வெளியாக்கும் தக்க

சாதனங்கள் ஆகும். இவற்றில் மாணவர்கள் பேச்சில் கலந்துகொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட விஷயத்தை ஒரு மாணவன் சொற்பொழிவு செய்ய; மற்றவர்கள், விடுபட்ட விஷயத்தை அவைக்கு முன்வந்து பூர்த்தி செய்யலாம். சிலர் ஒருவன் சார்பாக நின்று அவன் சொன்ன விஷயத்தை ஒட்டிப் பேசலாம். சிலர் வெட்டி எதிர்வாதமாகப் பேசலாம். சிலர் விஷயங்களைத் திரட்டி முடிவுரைபோல் கூற முன்வரலாம். மற்றும் சிலர் தங்கள் சொந்த அபிப்பிராயத்தைச் சொல்லலாம். ஒருவனைச் சார்ந்து பேசும்போது அதற்குத் தக்க மேற்கோள், விசேஷக் கூற்றுக்கள், பிறர்மொழிகள் முதலியவற்றைக் கொண்டு, விரிவாக ஒருவன் பேசலாம். இப்படி மாணவர்கள் செய்யும்போது ஆசிரியர்கள் அவர்களுடைய ஆர்வத்தை அதட்டிக்கெடுக்காமல், சுயேச்சையாக விட வேண்டும். குற்றம் குறை இருப்பின் அதைப் பிறகு அவர்களுக்குத் தக்க முறையில் சீர்திருந்தச் சொல்லவேண்டும்.

இதர முறைகளும்—பேச்சுப் பழக்கமும்

மாணவர்கள் தங்களுக்கு இஷ்டமான புத்தகத்தைப் படித்த பின்பு, தங்கள் சொந்த அபிப்பிராயத்தை வகுப்பில் சொல்லலாம். அப்படிச் சொல்லும்போது, அதைத் தாங்கி பேசுவோர்களையும், மாறாகப் பேசுவோர்களையும் உற்சாகப்படுத்தலாம். படித்த புத்தகத்தின் விஷயத்தைச் சுருக்கமாகவும், சாரமான பாகத்தை விவரித்தும் சொல்லும் படி சில பயிற்சிகள் அளிக்கலாம். அவ்வப்போது கலாசாலைகளில் நடக்கும் பொதுக்கூட்டங்களில் **(General Assembly)** பிள்ளைகள் கலந்து கொள்ளுமாறு ஆசிரியர்கள் செய்யவேண்டும். ஏதாகிலும் ஒரு விஷயத்தைக்கொடுத்து திடீரென்று ஒருவனைப் பேசக் கேட்கலாம். இவ்விதமாக பற்பல சாதகங்களைக் கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களின் வாய்மொழி பயிற்சியை, விருத்தியாக்கி கட்டுரை எழுதும்படி அவர்களுடைய திறமையைப் பலப்படுத்தவேண்டும்.

(தொடரும்)

ஆத்ம சாதகருக்கு நல்விருந்து!

அரிய சாதனை முறைகள் அடங்கிய பெருநூல்கள்!

புதிய வெளியீடு!

ஸ்ரீமத் பிரமானந்த சுவாமிகள் ஞானோபதேசம்

விலை .... 0—14—0

புதிய பதிப்பு!

★

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அருளிய

உபதேச மொழிகள்

சாதாபைண்டு 1—12—0 கலிகோ பைண்டு 2— 0—0

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர் :: சென்னை.

ஸ்ரீ முருகன் பாம்

ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய குடும்பத் தோழன்!

கோடைக் கொப்பளம், சொறி, சிரங்கு, சற்பான், வெட்டுக் காயம், சேத்துப்புண் முதலிய சர்ம வியாதிகளுக்கு, இஞ்செக்ஷன், ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்தும் கைகண்ட ஔஷதம். களிம்பு ரூபமாய் இருக்கும் இம்மருந்தை தெங்காய் எண்ணெயில் குழைத்து புண் உள்ள இடங்களில் நன்றாகத் தடவி ஒரு மணி ஊரவிட்டு சீக்காய் அல்லது சோப் போட்டு நன்றாக சுத்தம் செய்து வந்தால் ஒரு வாரத்திற்குள் ஆச்சரியகரமாக குணப்படுத்தி விடுமென்பது நிச்சயம். (மேலுக்கு மட்டும் உபயோகப்படுத்தவும்.)

ஒரு அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1—0—0 (தபாற் செலவு வேறு)

குழந்தைகளின் கபநிவாரணி

அவு. பாட்டில் ரூ. 0-6-0

மற்ற விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

S. NARAYANASWAMY, M.P.S. (India)

Chemist, No. 5, Niliveeraswamy Chetty Street, TRIPLICANE, MADRAS.

வாழ்க்கைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட பாடதிட்டம் VII

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

முந்தின வருஷம் மேலே கண்ட தலைப்பின்கீழ்ப் பல பாடதிட்டங்கள் பாலர் கல்வியியில் வெளி வந்துள்ளன. அவையாவும் பாலர் வகுப்பு நீங்கலாக மற்ற வகுப்புகளுக்கே பாஷை, கணிதம், கைவேலை, இயற்கையறிவு பாடம், சுகாதாரம், சரித்திரம், பூகோளம், சமூக வாழ்க்கை போன்ற பொது அறிவுப் பாடங்கள் கலந்து அமையும்படி உரியனவாகக் காணப்பட்டன. இங்குப் பாலரால் கையாளக் கூடிய இரண்டு விஷயங்களை எடுத்து விஸ்தரித்துச் சொல்ல விரும்புகிறேன். அவைகளில் ஒன்று பொம்மைக் கடை, மற்றொன்று வீட்டை ஒழுங்கு படுத்தலும் அழகு படுத்தலும்ஆகும். பாலர்களுக்குப் பொதுவாகச் செய்கையே முதன்மையாக கவனிக்கப்பட வேண்டுமாகையால் கைவேலைத் திட்டங்களே இப்பாடத்தில் பெருத்த அம்சமாக விளங்கும். அத்துடன் அவர்கள் வயது அறிவு எல்லைக்குப் பொருந்திய பாஷை, கணக்கு, சுகாதாரம் இவற்றை இயல்பாக இணைப்பதும் ஏற்றதாகும்.

12. பொம்மைக்கடை

I. செய்கை

கருவி 1. களிமண். கோலி, சிறியது, பெரியது
மிட்டாய் (பளபளப்பான காகிதத்தால் மூடவும்).
பந்து, சிறியது, பெரியது.
பானை, கிண்ணம், டம்பளர்.
காய்கறிகள்—(மாங்காய், தேங்காய்) பழங்கள்.
சக்கரம்.

2. காகிதம். விசிறி, (பலவித வர்ணக்காகிதம்).
சங்கிலி (ஷை)
காற்றாடி (பெரியது, சிறியது ஷை)
செடிகள் (ஷை)
குடை.

3. நெருப்புப்பெட்டி.
ரயில்வண்டி,
கட்டைவண்டி,
தேதிப் பெட்டி.

4. **பழுப்புக் காகிதம் (படம் புஸ்தகங்கள்).**

படம் (நூல் பெட்டி, துணியில் ஒட்டப்படும் படம்).
ஸ்டாம்பு
செருப்புப் பெட்டி படம்.

5. **அட்டை.**

குல்லா, தம்பட்டம், செருப்பு, சீப்பு.

6. **குச்சி, காகிதம், களிமண்.**

மரம்.

II. கடை வைக்க ஏற்பாடு.

நவராத்திரிப்படி போல் 3, 4 அடுக்கு உள்ள ஒரு படிக்கட்டு: கிடைக்கக்கூடிய வஸ்துக்களைக் கொண்டு குழந்தைகளின் யோசனை, உதவியைக் கொண்டு ஒரு படிக்கட்டு நிர்மாணித்தல்:

III. பாஷை: (சம்பாஷணை, எழுத்து).

எவைகள் 1 பை, எவை 2 பை, 3 பை, என்று தீர்மானிக்கச் சம்பாஷணை செய்யவும். 1 பை என்று தீர்மானிக்கப்பட்டவைகளைக் குறித்துக் காட்டி "எது எடுத்தாலும் 1 பை" என்று என்றும் 2 குவியல்களை முறையே காட்டி எது எடுத்தாலும் 2 பை, எது எடுத்தாலும் 3 பை என்பதை விளக்கவும்:

எழுத்து: 1 பை, 2 பை, 3 பை *சாமான்களின் ஜாப்தா ஒன்று எழுதவும்: பிள்ளைகள் எழுதித் தயார் செய்ய வேண்டும்.*

எது எடுத்தாலும் 1 பைதான்	எது எடுத்தாலும் 2 பைதான்	எது எடுத்தாலும் 3 பைதான்
கோலி	பட்டம்	ரயில் வண்டி
பிட்டாய்	மாங்காய்	குடை
விசிறி	பந்து	மரம்
கொடி	பழம்	குல்லா
குடை	தேதிப் பெட்டி	கட்டைவண்டி
சீப்பு	தம்பட்டம்	கொடி
சக்கரம்	செருப்பு	படப்புஸ்தகம்.

IV. *படிக்கட்டின் தட்டுகளில் மேலே காட்டியபடி சாமான்களை வரிசைப்பட ஒழுங்காகவும் அழகாகவும் அமைத்துக் காட்டுதல்.*

V. கடை வியாபாரம்.

1. ஒருபை, இரண்டு பை, காலணு நாணயங்களைக் குறிக்கச் சில வட்டமான அட்டைத் துண்டுகள் கத்தரிக்கவும் : ஒவ்வொரு வரும் 3 துண்டாவது வைத்துக் கொள்ளவும் :

2. ஏதாவது இரண்டு சாமான் வாங்கி விலை கண்டறிந்து காசு கொடுத்து உசிதப்படி மிச்சம் பெற்றுக் கொள்ள ஏற்பாடு :

வியாபாரம் ஆனபிறகு.

3. பைகளை அடுக்குதல்; காலணுக்களை அடுக்குதல்; மொத்தக் காசு எவ்வளவு. அணு, பை ?

VI. சுத்தம் ஒழுங்கு. அவ்வப்போது கவனிக்கப்பட வேண்டியவை.
கைவேலைக்குப் பிறகு தேகசுத்தம் உடைச்சுத்தம் அறைச்சுத்தம்.
சாமான்களை ஒழுங்காய் வைத்தல் :
கருவிகளை அவைகளுக் கேற்ற இடத்தில் வைத்தல்.

VII. வஸ்துக்களின் தன்மை
காகிதம், களிமண், அட்டை, நிறங்கள்.
கனம், இலேசு, கெட்டி, மிருது முதலியன.

VIII. பாஷை விளையாட்டு. 1. கடை சாமான்களின் பெயரை அட்டைத் துண்டில் எழுதிக் கத்தரித்து வைத்துக் கொள்ளவும். அவைகளைக் குலுக்கிப் போட்டு ஒன்று ஒன்ருக எடுத்துப் படித்து அதற்குப் பொருத்தமான சாமானின் பக்கத்தில் வைக்கும் பழக்கம்.

2. களிமண், அட்டை, காகிதம், முதலியவைகளில் செய்யப்பட்டவைகளைப் பிரித்து வைத்தல்.

13. பாப்பாவின் வீடு :

I. சம்பாஷணை :

1. குடியிருக்கும் இடம், சொந்த வீடு, வீட்டின் பாகங்கள்; ஒரு வீட்டைப் பார்வையிடுதல்: திண்ணை, வாசற்படி, ரேழி, முற்றம், தாழ்வாரம், கூடம், கொல்லை ரேழி, கொல்லை வாசற்படி, கொல்லைப்புறம் கிணறு, சாக்கடை, தோட்டம்.

2. அறைகள்

1. சமையல் அறை.	5. புஸ்தக அறை.
2. படுக்கை உள்.	6. பூஜை அறை,
3. சாமான் உள்.	7. வெந்நீர் உள்.
4. உடுப்பு அறை.	8. தட்டுமுட்டுச் சாமான்கள.

3. ஆங்காங்குக் காணப்படும் சாமான்கள் ஏற்பாடுகள்.

(a) சமையல் உள். சமையல் பாத்திரம், அலமாரி, அடுப்பு, சட்டிபானைகள். தொட்டி முற்றம், விளக்கு, கும்மட்டி அடுப்பு, அம்மி, குழவி, கல்லுரல், உறி, அகப்பைக் கூடு, துடைப்பம்.

(b) சாமான் உள். சட்டிபானை, தகர டப்பி, மரப்பெட்டி, மண்ஜாடி, கற்சட்டிகள், கூடை, முறம், சல்லடை.

(c) உடுப்பு உள். பீரோ, மரப்பெட்டி, தகரப்பெட்டி.

(d) கூடம். ஊஞ்சல், தொட்டில், கண்ணாடி, மேஜை, அலமாரி, தொங்கவிடும் விளக்கு, நாற்காலி, படங்கள்.

(e) பூஜை உள். படம், பூஜை சாமான், குத்துவிளக்கு, கோலக் குழாய்.

(f) படுக்கை உள். பாய், தலையணை, மெத்தை, கட்டில், பெஞ்சு.

(g) புஸ்தக உள். மேஜை, நாற்காலி, அலமாரி, பீரோ, விளக்கு.

(h) வெந்நீர் உள். தவலை, அடுப்பு, விறகு, எரிமுட்டை.

(i) கொல்லைப்புறம். கிணறு, தோய் கல், கக்கூஸ், செடி, மரங்கள், பூந்தொட்டிகள்.

(j) விசாலமான முன்புற அறை (ஹால்). மேஜை, நாற்காலி, சாய்வு நாற்காலி, சில பூந்தொட்டிகள் முதலியன.

II. செய்கை—சேர்க்கை

பாலர்கள் இந்த ஏற்பாட்டைச் செய்து முடிப்பதற்கும் விளையாட்டு, வஸ்துக்கள் மூலமாக அனுஷ்டித்துக் காட்டுவதற்கும் அவர்கள் தாமாகவே இவற்றைச் செய்யவேண்டியிருக்கும், மற்றும் சிலவற்றைச் சேர்க்கவேண்டியிருக்கும், மற்றும் சிலவற்றை உபாத்தியாயரே தமது முயற்சியால் செய்தோ அல்லது சேர்த்தோ கொடுக்கவேண்டும்.

செய்கை			
கருவி	சாமான்	சேர்க்கை	உபாத்தியாயர் முயற்சி
களிமண் :	அடுப்பு	சிறு கண்ணாடி	ஊஞ்சல்
	பானை	கோலக் குழாய்	தொட்டில்
	அம்மி குழவி	விறகுக் குச்சி	அறைகளைப் பிரித்துப்பட்டித் திரைகள்
	உரல் உலக்கை	துடைப்பம்	
	கல்லுரல்	மரச்சொப்பு	
	கூடை, முறம் சல்லடை	மாக்கல் சொப்பு	(மரத் திரைகள்)
	அகப்பைக்கூடு	பித்தளைவிளையாட்டுச் சாமான்	ஓர் அட்டை வீடு

காகிதம் : காகிதப்பாய்
தலையணை
சங்கிலி, விசிறி
கட்டை கிணறு கட்டுதல்
களிமண் } செடி
குச்சி } மரம்
காகிதம் } பூந்தொட்டி
குச்சி : ஏணி

III. அனுஷ்டானம்

(1) சம்பாஷணைப் பிரகாரமும் முன்னேற்பாட்டின் பிரகாரமும் வீடு வைத்து அறைகள் தடுத்து தாம் செய்த, சேகரித்த சாமான்களை அந்தந்த அறைகள், இடம் தகுந்தாற்போல் வைக்கவும். பிறகு சங்கிலி கள், கொடிகள் கட்ட ஏற்பாடு செய்து, அழகுபடுத்தவும்.

(2) திறந்த மணல் வெளியில் பல அறைகளுக்காக இடங்கள் அமைத்து ஆங்காங்கு ஏற்ற சாமான்களை ஏற்ற இடத்தில் அமைத்தல்.

IV. சம்பாஷணை.

பல பண்டங்களால் செய்யப்பட்ட சாமான்கள்.
மரம் — பெட்டி, மரவை, அகப்பை, அகப்பைக்கூடு, சொம்பு, ஐந்தறைப் பெட்டி.
மாக்கல் — கற்சட்டி.
தகரம் — டப்பிகள்.
களிமண் — சட்டி, பானை, அடுப்பு.
பித்தளை — டம்ளர், கரண்டி, அடுக்கு.
கெண்டி, சிப்பல், தட்டு, குடம், தோண்டி, தாம்பளம், டப்பி, கூஜா.
அலுமினியம் — தட்டு, கிண்ணம்.
ஈயம் — கிண்ணம், சொம்பு, டம்ளர்.
இரும்பு — வாணலி, கரண்டி, தோசைக்கல்.

V. வாசிப்பு, எழுத்து: A பாடங்களும் விளையாட்டுக்களும் :

1. பல அறைகளின் பெயர், வீட்டுப் பாகங்களின் பெயர், ஆங்காங்கு காணப்படும் வீட்டுச் சாமான்களும், பாத்திரங்களும் அட்டைத் துண்டுகளில் எழுதிப் படித்தல் ;
2. வார்த்தைகளையும் சாமான்களையும் பொருந்த வைத்தல்.
3. வீடு அமைக்கச்செய்து வீட்டின் பாகங்கள், அறைகளின் பெயர் எழுதிக்கொடுத்த துண்டுகளைச் சரியான இடம், அறை களின் பக்கத்தில் வைக்கச் செய்தல்.

4. மரம்—மாக்கல்—தகரம் — களிமண்—பித்தளை—ஈயம்—அலுமினியம். அதனதன்கீழ் அக்கருவியில் செய்யப்பட்ட சாமான்களின் பெயரை அடுக்குதல்.

5. பல பத்திரங்களின் பெயர்களைக் கலந்து கொடுத்துத் தேவையான பிரகாரம் பிரித்துவைக்கச் சொல்லுதல்.

VI. சுத்தம் ஒழுங்கு: பொம்மைக்கடை விஷயம் கவனிக்கவும்.

VII. கணக்கு.

அறைகளிலுள்ள சாமான்களை எண்ணுதல்.
மரம், களிமண் இவைகளால் செய்யப்பட்ட சாமான்களை எண்ணுதல்.
எந்த அறையில் அதிக சாமான்கள்?
எந்த பண்டத்தால் செய்யப்பட்ட பாத்திரங்கள் அதிகம் காணப்படுகின்றன?

VIII. சுகாதாரம், தேகப்பாதுகாப்பு, வீட்டுப்பாதுகாப்பு.

(a) ஜன்னல் காற்று, புகைபோக்கி, பெருக்குதல், மெழுகுதல், காயவைத்தல், நல்ல வெளிச்சம், பொதுவான சுத்தம் (வாசல், உள், கொல்லைப் புரம், சுவர்) அன்றாடம் பாத்திரம் தேய்த்தல், ஒட்டடை அடித்தல்.

(b) நல்ல ஜலம்.
சமையல் செய்ய நெருப்பின் அவசியம்.
நெருப்பு, விளக்கு — ஜாக்கிரதையாக இருத்தல்.

(c) பூட்டு, சாவி, தாப்பாழ் சுவர், கம்பு, வேலி, முற்றத்தில் கம்பி முதலியன.

14. சிறுவர் சித்திரப் பத்திரிகை

மேல் வகுப்பில் அதிகச் செலவுக்கு இடங்கொடுக்காதபடி சொந்த முயற்சியால் செய்து சாதிக்கக்கூடிய விஷயம் சிறுவர் சித்திரப் பத்திரிகை. அவ்விஷயம் பிள்ளைகளால் சாதித்துப் பார்க்கப்பட்ட விஷயமுமாகும். அவ்விஷயதார் எப்படி ஆரம்பித்துச் சாதிப்பதும் அத்துடன் இயல்பாய் இணைக்கக்கூடிய பாட விஷயங்களும் இங்கு எடுத்துக் காட்டப் பட்டிருக்கின்றன.

I. சம்பாஷணை:

தபாலில் அல்லது நேரில் பெற்றுக்கொள்ளுதல்.

யுத்த சாமாசாரம்: தினசரிப் பத்திரிகை: தினசரி (காலை, மாலை) வாரப் பதிப்பு: பல பாஷைகளில் பத்திரிகை: வெளியிடப்படும் நேரம்:

பத்திரிகைப் படங்கள். தினசரிப் பத்திரிகை சமாசார விஷய அட்டவணை ஒரு பத்திரிகையிலிருந்து கண்டறியவும்:

1. யுத்த சமாசாரம்
2. உள் நாட்டு சாமாசாரம்
3. வெளியூர் விஷயங்கள்
4. உள்ளூர்ச் செய்திகள் (நகரச் செய்திகள்)
5. இராஜாங்க விஷயம்
6. சுதேச சமஸ்தான சமாசாரம்
7. கொண்டாட்டம்
8. பிரசங்க விஷயம்
9. கடிதம்
10. ஆசிரியர் உரை.
11. நியாயஸ்தல நடவடிக்கை
12. விளம்பரங்கள்—படங்கள்:

II. வகுப்புப் பத்திரிகைகள்:

பிள்ளைகள் எடுத்துக் கொண்ட விஷயங்கள்.

1940 ஜனவரி பள்ளிக்கூடம் திறந்ததும் இவ்விஷயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அது தைமாதம்; ஆகவே அவர்கள் எடுத்துக் கொண்ட அடியிற் கண்ட பெரும்பாலான விஷயங்கள் தைமாதத்துச் சம்பவங்களை ஒட்டியவையா யிருக்கின்றன.

நெ	விஷயம்	எழுதினவன்	பக்கம்
1.	மாதக் கியாலண்டர்	P. M. கிருஷ்ணன்.	 2
2.	உலகப் பாக்கு	K. பாலகிருஷ்ணன்	 1
3.	யுத்தப்படங்கள்	K. நடராஜன்	... 3
4. 4a	விடியற்கால பஜனை பண்டாரக் கூட்டம்	J. விஜயலக்ஷ்மி	... 4
5.	வீட்டிற்குச் சுண்ணும்பு பூசுதல்	K. ரங்கனுதன்	 4
6.	பொங்கல் பானை	M. மணிலிங்கம்	 4
7.	சிறு கதை	M. அம்பலவாணன்	... 5
8.	விடுகவி	K. S. கணேசன்	 5
9.	சங்கராந்தி	A. கோபாலன்	
10.	கனுப் பொங்கல்		7
11.	கோலம் போடுதல்	S. லக்ஷ்மி	
12.	கோலம்	N. இராஜம்மாள்	 7
13.	எங்கள் ஊர்	S. N. ஸ்ரீநிவாசன்	... 8
14.	மாட்டுப் பொங்கல்	V. S. அனந்த லக்ஷ்மி	 9
15.	பக்ரீத்	S. குலாம் தஸ்தகீர்	 10
16.	புது வருஷம்	R. பீடர்	 10
17.	கல் சூளை	S. குப்புசாமி ...	... 11
18.	பொங்கலுக்கு வேண்டிய துணிகள்	C. ஷண்முக சுந்தரம்	... 11
19.	சென்னைப் பொருள்காட்சி	K. நடராஜன் ...	 12
20.	கதை	J. விஜயலக்ஷ்மி	 13
21.	நெருப்புப்பெட்டி படங்கள்	சையத்கரீம் ...	... 13
22	குதிரைப்பந்தயம்	செல்வராஜன் ...	... 14
23.	விஷய அட்டவணை	K. பாலகிருஷ்ணன்	... 15

இப்பத்திரிகை செவ்வனே செய்யப்பட்டுக் கையெழுத்தில் வெளிவர மூன்று வாரங்களாயின. அன்றுடம் 2, 3, 4 பேர் தாம் தாம் எடுத்துக் கொண்ட விஷயங்களைப்பற்றித் தாமே எழுதிவருவார்கள். உபாத்தியாயர் அதைப் பரிசீலனை செய்து தப்பிதங்களைத் திருத்தித் தாமும் இரண்டொரு புது விஷயங்களையும் குறிப்பார். மறுபடி அவரவர்கள் தாம் எழுதியதை மறுபடி திருத்தியும் நன்றாகவும் எழுதியும் தருகிறார்கள். கூடியவரையில் எல்லா விஷயங்களும் படங்களுடன் கூடியிருந்தன. பத்திரிகாசிரியர் தபால் பெட்டி என்ற ஓர் அட்டைப் பெட்டியில் இவை போடப்படவேண்டும். பிறகு 15 முழு வெள்ளைக் காகிதங்கள் 15 பழுப்புக் காகிதங்களில் ஒட்டப்பட்டன. மேலே ஓர் அட்டையும் கீழே ஒன்றும் தயாரிக்கப்பட்டன. "சிறுவர் சித்திரப் பத்திரிக்கை" என்று பெயர் கொடுப்பதாக ஒரு சமயம் தீர்மானிக்கப்பட்டது எல்லா விஷயங்களையும் நன்றாகக் கையெழுத்துப் படிந்த நால்வர்கள் மேலே சொன்ன விஷயங்களைப்பற்றி அவரவர் கொடுத்ததை அப்படியே மேற்படி வரிசைப் பிரகாரம் எழுதினார்கள். பிறகு எல்லாம் சேர்த்து ஒருங்க வைக்கப் பட்டது.

ஒரு நாள் எல்லோரும் தாம் தாம் எழுதின விஷயங்களை வகுப்பில் எல்லோருக்கும் படித்துக் காட்டினார்கள்.

இத்துடன் இணைக்கக்கூடிய பொது அறிவு விஷயங்கள்.

III. உல்லாசப் பிரயாணம்: ஊரிலுள்ள அச்சாபீஸ்.

(*a*) அச்சுக் கோத்தல், முடுக்குதல், இயந்திரத்தில் மை பூசிக் காகிதம் கொடுத்து அச்சடித்தல்.

(*b*) காகிதம் செய்தல்.

IV. (a) எழுத்தின் அபிவிருத்தி: கல்வெட்டுகள்: கல்வெட்டுச் சித்திரங்கள், எழுத்துக்கள்: கோயில் சித்திரங்கள்: தமிழ்மொழி எழுத்துக்கள்.

(b) எழுது கோல்கள். (1) எழுத்தாணி (2) கழுகு இறகு பேனா (3) காகிதப் பென்சில், மையும் பேனாவும் (நிப் கொண்டது).

5. ஊற்றுப் பேனா (நிப் கொண்டது) 6 ஊசிகொண்ட ஊற்றல் பேனா. நூதன ஊற்றுப்பேனா: தானே மை யிழுக்கும் ஊற்றுப் பேனா: மையிழுப்பது வெளிப்படையாகத் தெரியக்கூடிய ஊற்றுப் பேனா.

(c) கல், கோயில் பிராகாரம், பழைய காலத்துப்பனை ஏடுகள். ஏட்டுச் சுவடி: தற்கால காகிதப் புத்தகங்கள்.

(V) மை காய்ச்சுதல், பென்சில் செய்தல்:—மை காய்ச்சும் முறையை அறிந்து மை காய்ச்சுதல்: அனுபவம் வாய்ந்த சிநேகிதர் சொல்லிய முறை பின் வருமாறு,

தூள்செய்த கடுக்காய் 3 பலத்தைச் சாத்நீர்த்தத்தில் 3 வாரம் ஊறவை. பிறகு 4 சேர் திரவமாகச்செய்து இரும்புச்சட்டியில் ½ மணி நேரம் காய்ச்சி ஆறவை. மூன்று நாளைக்குப் பிறகு 1 பலம் தூள்செய்து கரைத்த அன்னபேதியைச்சேர்த்து ஜலம் ⅝ பங்கு வந்தவுடன் இறக்கி ஆறவைத்து வடிக்கட்டு, 4 நாள் தெளிய வைத்து 1 பலம் சுத்தஞ்செய்து தூள் செய்த வேலம் பிசினைச்சேர் 15, 16 நாள் தெளியவைத்து வடிக்கட்டு: மண் பாண்டம், பீங்கான் இவற்றிலும் காய்ச்சலாம், நல்ல நீல பவுடர் ⅝ பலத்தை முடிச்சாகக்கட்டி தெளிய வைத்ததில் அமிழும்படி தொங்கவிடு. 2 நாள் கழித்து வடிக்கட்டு சமீபத்தில் பென்சில் செய்யுமிடமிருந்தால் அங்குச் சென்று வரலாம். அல்லது அவ் விஷயம் நன்கு அறிந்தவர் ஒருவர் சொல்லக்கேட்கலாம்.

VI தினசரிப் பத்திரிகைச் சமாசாரங்கள் வாசித்தல்:—

பிள்ளைகள் வயது அறிவு முதிர்ச்சிக்குத் தகுந்தபடி தினசரிப் பத்திரிகையில் தகுந்த விஷயங்களை வெட்டி பழுப்புக் காகிதங் களில் ஒட்டி வைத்துப் பிள்ளைகளுக்குக் கொடுக்கவும். பிள்ளை கள் அவற்றை மேன்மையாக வாசித்து மறுபடி உபாத்தியாய ரிடம் உரக்க வாசிக்கலாம். பத்திரிகைச் சமாசார வாசிப்பு என் பதை ஒரு கட்டாய வாசிப்புப் பாகமாக எடுத்துக்கொள்வது அவசியம். அடியிற்கண்ட பிரகாரம் அதைப் படிப்படியாக அமைத்துக் கொள்ளலாம்.

1. பெரிய எழுத்தில் காணப்படும் சுலபமான வரிகள். விளம்பரங் கள். (பெரிய எழுத்தில்.)

2. 3, 4, 5 வரிக்குள் பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கும் சுலப மான விஷயம். கலியாணம், மரணம், வண்டி மோதுதல், தீவிபத்துக் காரிய நிகழ்ச்சி. அதேமாதிரி விளம்பர விஷயம்:

3. குறிப்பிட்ட சில சமாசாரங்கள்: ஒருபத்தி: யுத்த சமாசாரம், பொதுக் கூட்டங்கள் சுலபமான விஷயங்கள். (உள்ளூர் வெளி யூர் விஷயங்கள்).

4. பாஷை அபிவிருத்திக்கேற்ற ருசியான விஷயங்கள்: பண்டிகை விஷயங்கள்.

   பந்தல் அலங்காரம், கலியாண விவரணை, கூட்டவர்ணனை விளையாட்டு, போட்டிப்பந்தய நிகழ்ச்சிகள் மழைச்செய்திகள்.

5. வாழ்க்கைக்கு உபயோகமான சிறு விஷயங்கள். எளிதில் அறிந்து கொள்ளத்தக்க வழக்குகள், விசாரணை, தீர்ப்பு.

6. வகுப்பு அறை தினசரிப் பத்திரிகைச் செய்திகள் :—

இந்த விஷயம் நடக்கும் காலத்தில் தினசரி ஒன்றிரண்டு ரஸமான செய்திகளை வகுப்பறையில் ஒரு காகிதத்தில் எழுதிப்படிக்கச்செய்து வரவும்.

VII. பக்கம் அறிதல் :—

ஒரு முழுக்காகிதத்தை அரைக்கால் தாளாகவரும் வரையில் மடித்துப் புஸ்தகமாகக் காணும்படி செய்து பிரிக்காமலே பக்கம் எண்ணிட்டுப் பிரித்துப் பார்க்க ஒரு முழுக்காகிதம் பிரிக்கப் பட்ட மாத்திரத்தில் அச்சுப்பக்கங்கள் முன்பின் பாகங்களில் எவ்வாறு அமையும் எனக் கவனித்தல்.

VIII. பனை ஓலைச்சுவடி : பனை ஓலை பாலசிட்சை - பனை ஓலைப்புஸ்தகங்கள் : மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் அவர்கள் தமிழ் அபிவிருத்திக்குச் செய்துவரும் மேலானதொண்டு : பழைய ஏட்டுப்பிரதிகளைச் சோதித்து அச்சிடுதல். ஒருநாள் இரவு நிலவில் தாம் தேடி வந்த ஓர் ஏட்டை ஒருவர் கொடுக்கத்தாம் அடைந்த மகிழ்ச்சி இங்கிலாந்தில் முதன்முதலாக அச்சு வந்ததின் வரலாறு. வில்லியம் காக்ஸ்டன் அச்சு கண்டறிந்து அச்சுக்கூடம் ஏற்படுத்தியது.

IX. தினசரிப்பத்திரிகை காரியாலயம் சென்று பார்த்தல் காகிதம் உருளையாகக் காணப் படுதல். } முடிந்தால்.

காகித அளவை.

24 காகிதம் = 1 குயர்
20 குயர் = 1 ரீம்
10 ரீம் = 1 பேல்.

சுலபமான கணக்கு :

காகிதங்களை நோட்டு தைத்தல்-நோட்டுப் புத்தகங்களிலுள்ள பக்கங்களுக்குத் தக்கப்படித் தேவையான முழுக் காகிதங்களைக் கிழித்துக் கொள்ளுதல்.

கால் அளவு நோட்டு :—ஒரு காகிதத்திற்கு 8 பக்கம்—64 பக்கம் உள்ள நோட்டிற்கு எத்தனைக் காகிதம் தேவை?

அரைக்கால் அளவு நோட்டு — ஒரு காகிதத்திற்கு 16 பக்கம். 48 பக்கம் உள்ள நோட்டிற்கு எத்தனைக் காகிதம் தேவை?

1 குயர் காகிதத்தில் 3,4,6,8,12, காகிதமுள்ள நோட்டுகள் முறையே எத்தனை தைக்கலாம்?

செப்டம்பர் 1941

ஞா		7	14	*21	28
தி	1	8	15	22	29
செ	2	9	16	23	30
பு	3	10	17	24	
வி	4	11	18	25	
வெ	5	12	19	26	
ச	6	13	20	27	

I. "ஹிந்துப்" பத்திரிகை தினசரி 0—1—0
ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் 0—2—0
*பத்திரிகையில் வந்த விடுமுறை நாள்.

செப்டம்பர் மாதத்தில் தினப்படி ஒருவர் காசு கொடுத்து "ஹிந்து" பத்திரிகை வாங்கினால் எவ்வளவு செலவாகும்?

மாதச்சஞ்சிகை

II. பாலர் கல்வி	0—4—0
கலைமகள்	0—6—0

வாரச் சஞ்சிகை

ஆனந்த விகடன்	0—2—0
சுதேசமித்திரன் வாரப் பதிப்பு	0—2—0
சுதேசமித்திரன் மாதம் ஒன்றுக்கு	1-14—0

ஒரு வாசக சாலைக்கு இவற்றை வரவழைக்க ஒரு மாதச் செலவு என்ன ஆகும்?

X. விஷய முடிவு.

தாம் எழுதிய பத்திரிகையைப் படித்தல்—பொருள் காட்சி.

இதே விஷய சம்பந்தமாக II வது பிரிவில் சொல்லியபடி தாம் எழுதிய சிறுவர் சித்திரப் பத்திரிகையைப் பூர்த்தி செய்தல்.

பத்திரிகைக்குப் பெயர், பத்திரிகைக்கு அட்டை இவைகள் தயார் செய்து முடித்தல்—

எழுதியவற்றை ஒவ்வொருவராகப் படித்துக் காட்டுதல்.

பொருள் காட்சி: தாம் எழுதிவந்த விஷயங்கள், சிறுவர் சித்திரப் பத்திரிகை, பழைய பனை ஓலைச் சுவடிகள், பத்திரிகைகளின் பெயர், விலை, பக்கம், பாஷை முதலியவற்றைக் காட்டும் அட்டவணை. தாமே பக்கமிட்டு வைத்த நோட்டு புத்தகம்—வகுப்பு அறை பத்திரிகைச் செய்திக் குறிப்புகள்—சமாசாரத் துணிகரமாய்ப் படிப்பதற்காகத் தயார் செய்யப்பட்ட விஷயங்கள்—பத்திரிகை சம்பந்தமான கணக்குகள்—

நெ.	பெயர்	பாஷை	பக்கம்	தினசரி வாரப் பதிப்பு மாதம் இருமுறை வாரப் பதிப்பு	விலை
1	சுதேசமித்திரன்	தமிழ்	8	தினசரி	0—1—0
2	பாலர் கல்வி	தமிழ்	40	மாதப் பதிப்பு	0—4—0
3	ஹிந்து	இங்கிலீஷ்	12	தினசரி	0—1—0
4	ஆனந்த விகடன்	தமிழ்	120	வாரப் பதிப்பு	0—2—0

நேரில் பார்த்து வந்த விஷயங்களைப்பற்றிய குறிப்புக்கள்—இவை பொருட்காட்சிக்குத் தருந்தவரை.

மதிப்புரை

பூ வர்ணனை: நான்காம், ஐந்தாம் வகுப்புக்களுக்கு

வெளியிட்டோர்: P. வரதாச்சாரி அண்டு கம்பெனி. விலை அணு 7, 8

ஆசிரியர்கள்: N. சுப்ரஹ்மண்யம், M. A., L T., F. R. G. S.
K. ராமமூர்த்தி, M. A., L. T., (DIP.), GEO.

இவ் விரு புத்தகங்களும் இந்த வருஷம் கல்வி இலாகாவிலிருந்து வெளியிடப்பட்ட புது பாடதிட்டத்தை அனுசரித்து பூகோள சாஸ்திர நிபுணர்களால் தயாரிக்கப்படும் தொடர் நூற்களைச் சேர்ந்தவை. நவீன பூகோளம் நம் மாகாணத்தில் 4, 5, 6 பாரங்களுக்கு 12 வருஷங்களுக்கு முந்தி (1929ஷு) யும், 1, 2, 3 பாரங்களுக்கு 6 வருஷங்களுக்கு முந்தியும் (1935ஷு) கொண்டு வரப்பட்டது. ஆனால், இது இப்பொழுது தான் ஆரம்ப பாடசாலைகளுக்கு கொண்டுவரப்பட்டது. இந்தப் புது பூகோளத்தை இப்பொழுது வெளியாக்கப்பட்ட பாடதிட்டத்தை அதிகாரிகள் ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர்களுக்கு விளங்கும்படி யிருக்கவேண்டுமென்று அவர்களுக்குத் தேவையான பாடக் குறிப்புகளுடன் அதிக விவரமாக வளர்த்தி, தயாரித்திருந்தின் கருத்தை அறியாமல் அதன் அளவைக் கொண்டு பலர் பயந்துவிட்டார்கள்.

இந்த நூலாசிரியர் பல விடங்களில் செய்த உபந்நியாசங்களிலிருந்து இந்த புது பாட திட்டம் சரியானதென்றும் சுலபமானதென்றும் விளக்கியிருக்கிறார். அதே விஷயத்தை இவ்விரு புத்தகங்களிலும் தெளிவாகக் காட்டியிருக்கிறார். கடினமென்று சாதாரணமாக ஜனங்கள் கருதும் 'விஷயங்களை எளிதாகவும் சுருக்கமாகவும் விவரித்திருக்கிறார். அதனால் இப்புத்தகங்கள் உபாத்தியாயர்களுக்கே வழிகாட்டும் முறையில் ஏற்பட்டிருக்கின்றன. மேலும், விஷயங்கள், தேவையான சித்திரப் படங்களாலும் தேசப்படங்களாலும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

பிரசுரகரும் புத்தகங்களை மேலான காகிதத்தில் பெரிய யெழுத்துகளுடன் அழகாக மாணாக்கர்களின் மனதை கவரும்படி, அச்சிட்டிருக்கிறார். விலையும் சரசமாயிருக்கிறது. இத்தொடர் புத்தகங்களை உபயோகப்படுத்தும் சிறுவர்கள் நல்ல பயன் பெறுவார்களென்று எங்கள் திட நம்பிக்கை.

[இப்புத்தங்கள் தெலுங்கிலும் போடப்பட்டிருக்கின்றன.]

கலையும் கைத்தொழிலும்—VI

R. M. Savur, Divisional Inspector of Schools.

(254-ம் பக்கத் தொடர்ச்சி)

தோல் பையை அநேக விதங்களில் அழகு படுத்தலாம். இம்முறைகளெல்லாம் அழுத்தப்பட்ட உருவங்களை கிரஹிக்கக்கூடிய சக்தி தோலுக்கு இருப்பதனால் ஏற்பட்டவை. தோலை ஓரிடத்தில் நன்றாக அழுத்தினால் அவ்விடத்தில் ஏற்படும் உருவம் எப்பொழுதும் இருக்கக் கூடியது. இரும்பு ஆயுதங்களினால் இந்த உருவங்களை வரைந்தால் கோடுகள் கறுமையாகி, உருவம் தெளிவாகத் தெரியும்.

வேண்டிய உருவங்களை வரைய இரும்பு ஆயுதம் ஒன்று தேவை. இதற்கு க்ரீஸர் (Creaser) அல்லது வரை கருவி என்று பெயர். இதை நாமே சுலபமாகச்செய்து கொள்ளலாம். ஒரு பேனாக்கட்டையில் 'நிப்பு (Nib) சொருகும் சுரையை எடுத்துவிட்டு அதில் ஒரு அழுத்தமான எஃகுக் கம்பியைக் கெட்டியாகச் சொருகினால் போதும். ஒரு பின்னல் ஊசி (Knitting needle)யைக்கொண்டு ஐந்து அல்லது ஆறு வரை கருவிகள் செய்யலாம். கீழே யுள்ள படத்தில் எஃகுக் கம்பி அல்லது ஊசியைச் சொருகும் விதம் காட்டப்பட்டிருக்கிறது.



இப்பொழுது உருவம் வரையும் விதத்தைக் கவனிப்போம். வரை கருவியை நாம் பேனாவைப்பிடிப்பது போலத்தான் பிடிக்கவேண்டும். ஊசியின் வளைவான பாகம் அடியிலும் கூர்மேல் பக்கமும் இருத்தல் அவசியம். உருவத்தை வரையும்போது ஊசியை முன்பக்கமாக அழுத்தவேண்டும்.

நான்கு புஜங்களையுடைய நக்ஷத்திரத்தின் உருவம் தோல்பையில் வரைய விரும்புகிறோம் என்று வைத்துக்கொள்வோம். முதலில் இந்த உருவத்தை ஒரு காகிதத்தில் வரையவும். பிறகு தண்ணீரில் நனைத்து பிழிந்தெடுத்த ஸ்பன்ஜ் (Sponge) அல்லது துணியால் தோலைத் துடைக்கவேண்டும். தோல் பையைக் கண்ணாடிப்போன்ற அழுத்தமான சொரசொரப்பில்லாத இடத்தில் வைத்து. உருவம் வரையப்பட்ட காகிதத் துண்டை பையின்மேல் மையமாக வைக்கவும், ஊசியின் முனையினால் காகிதத்தின்மேல் வரையப்பட்ட கோடுகளை அழுத்தினால்



உருவம் இலேசாகத்தோலில் காணப்படும். ஊசியை அழுத்தும்போது காகிதம் கிழிந்து விடக்கூடாது. காகிதத்தின் ஒரு மூலையைச்சற்று தூக்கி உருவம் தோலில் விழுந்திருக்கிறதா என்று பார்க்கலாம். பிறகு காகிதத்தை எடுத்து விட்டு தோலின் மேல் விழுந்திருக்கும் உருவத்தின் கோடுகளை வரை கருவியினால் நன்றாகத் தெரியும்படி வரையவேண்டும். இதற்கு ஊசியின் வளைந்த பாகத்தை உபயோகிக்கவேண்டும். வளைந்த பாகத்தைக்கொண்டு கோடுகளின் மேல் அநேக தடவைகள் முன்பக்கமாக அழுத்தினால் கோடுகள் வர வர நன்றாகத்தெரியும். அழுத்தும்போது அடிக்கடி தோலை ஈரமான ஸ்பஞ்ஜினாலோ துணியினாலோ துடைக்கவேண்டும். இப்படி அநேக தடவைகள் கோடுகளை அழுத்துவதனால், கோடுகள் நன்றாகத்தெரிவது மாத்திரமல்லாமல் பளபளப்பாகவும் காணப்படும்.

மேற்கூறியபடி உருவங்கள் வரைவதில் சில விஷயங்களை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

(1) வரை கருவியை அழுத்தும்போது அது கோட்டிற்கு வெளியே கொஞ்சம் கூடப்போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் ஒருதடவை தோலில் விழுந்த கோடு ஒரு பொழுதும் மறையாது. அழிக்கவும் முடியாது.

(2) **A** என்ற இடத்தில் ஆரம்பித்து ஒவ்வொரு கோட்டிற்கும் **C, B** யை நோக்கி வரையவும்.

(3) தோல் பையைத்திருப்பி ஊசியை எப்போதும் முன்புறமாக அழுத்தவும்.

நக்ஷத்திரத்தின் உருவம் வரைந்த பிறகு அதனுள் வேண்டுமென்றால் வைரம் போன்ற உருவத்தை அமைக்கலாம். இது படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

மேலே விவரிக்கப்பட்ட 'க்ரீஸிங்' (Creasing) என்னும் முறையினால் தோல் பைக்குத் தகுந்தவாறு இஷ்டப்பட்ட பல உருவங்களை





வரையலாம். வேண்டிய எழுத்துக்களையும் போடலாம். இங்கு காட்டியுள்ள படங்களில் எழுத்துக்கள் இரண்டு விதங்களில் வரையப்பட்டுள்ளன. கோடுகளாலாக்கப்பட்ட உருவம் (Line-drawing) எதையும் தோலில் வரையலாம் என்பது இப்படங்களிலிருந்து விளங்கும். சித்திரப் பயிற்சி பெற்றுள்ளவர்கள் தங்களுக்கு இஷ்டமான அழகான உருவங்களை வரைந்து கொள்ளலாம்.

படிப்பின் சில முக்கியமான மூலாம்சங்கள்

T. N. Krishnamurthi, M. A., L. T., *Dy. Inspector of Schools, Madras South.*

(259-ம் பக்கத் தொடர்ச்சி)

4. தனி முறை

சென்ற மாதம் நமது வகுப்புப் பாகுபாட்டில் சில குண தோஷங்களை எடுத்துச் சொன்னோம். இம்மாதிரியான காரிய நியமிப்பிலுள்ள முக்கிய தோஷம், தனிப்பிள்ளைகள் முழு பிரயோசனத்தையும் அடையவில்லை என்பதேயாம், ஆகையால் தனி முறையில் காரிய நியமிப்பு இருக்க வேண்டுமென்றும், பிள்ளைகள் அவரவர்கள் சக்திக்குத் தகுந்தவாறு தங்களுக்கேற்பட்ட பாடங்கள் படித்தல் வேண்டுமென்றும், வகுப்புமாறுதல் பிள்ளைகள் போதுமான தேர்ச்சியடைந்தவுடன் நடைபெறவேண்டு மென்றும் கூறப்பட்டது. இம்மாதிரி ஏற்பாடு எப்படி நடைபெறலாம் என்பதை இனி எடுத்துக் கூறுவோம்.

எந்த காரியத்தை மேற்கொண்ட போதிலும், அதில் தேர்ச்சி உண்டாவது நாம் நமது முழுசக்தியையும் உபயோகிப்பதன் பயனாகவே உண்டாகிறது. நமக்காக இதரர்கள் வேலைசெய்வதனாலே பிரயோஜனமில்லை. மற்றும் சில தேர்ச்சிகள் நாம் அடிக்கடி ஒரு காரியத்தைச் செய்வதனால் உண்டாகிறது. அறிவு வளர்சியானது இம்முக்கியமான சில தத்துவங்களை ஒட்டியே இருக்கிறது நமது அறிவானது, 'கற்றல்,' 'கேட்டல்' 'சிந்தித்தல்' என்ற மூன்று மார்க்கங்களாலேயும் வளர்கிறது. ஆகையால் இம்மூன்று மார்க்கங்களிலும் பயிற்சி மாணவன் பெறவேண்டும். உபாத்தியாயர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த மாத்திரம் அறிவு விருத்தியடைவதில்லை. தானும் சிரமப்பட்டு படிக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். படித்த விஷயத்தைப் பற்றிப் பிறகு யோசனை அல்லது சிந்தனை செய்யவேண்டும். அப்போதுதான் மாணாக்கன் முழு வளர்ச்சியையும் அடைகிறான்.

தனி முறை பிரகாரம் உபாத்தியாயர், பிள்ளைகளுக்கு வேண்டிய உதவி கொடுக்கவேண்டுமே யொழிய, அவர்களுக்காகத் தான் வேலை செய்யக்கூடாது. இம்முறைமேல்நாடுகளில் **Dalton Plan** என்ற பெயர் பெற்று நடைபெற்று வருகிறது. நமது பள்ளிக்கூடங்கள் தற்காலம் இருக்கும் நிலைமையை ஒட்டி, வெகு சில பள்ளிக்கூடங்களில் தான் **Dalton Plan** நடைபெறமுடியும். ஆனால் அதில் அடிப்படையாயுள்ள தத்துவத்தை ஒட்டி நமது பள்ளிக்கூடங்களுக்கேற்றவாறு தனி முறைப் பாடங்களை நாம் கைக்கொள்ளலாம். இப்போது வாய் மொழியாக உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்வதை மாற்றி, பாடங்களில் அநேக கேள்விகள் தயார் செய்து அவற்றை பிள்ளைகளுக்குக் கொடுத்து விட வேண்டும். பிள்ளைகள் புஸ்தகங்களைப்படித்து அக்கேள்விகளுக்குப் பதில் எழுதவேண்டும். தெரியாத சந்தர்ப்பங்களில் உபாத்தியாயரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். பிள்ளைகள் நாள் தோறும் அடையும் அப்போதைக்கப்போது, ஓர் அட்டவணை தேர்ச்

சியில் குறிக்கப்படவேண்டும். பிள்ளைகள் எழுதிய விடையை உபாத்தியாயர்கள் சரிபார்க்கவேண்டும். சரிபார்க்கும்போது, பிழைகள் தென்பட்டால் அப்பிழைகளைத் திருத்தும்படி செய்யவேண்டும். இம்மாதிரியான 'தனிமுறைக் காரியநியமிப்பு சில காலம் நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது பள்ளிக்கூட வகுப்புகளை நாம் பரிசிலனை செய்து பார்ப்பின் பிள்ளைகளின் தேர்ச்சி ஒரே மாதிரியில்லை என்பதையும், தனிப்பிள்ளைகள் மற்றவர்களைவிட அதிகமாகவோ, குறைவாகவோ தேர்ச்சிபெற்றிருக்கிறார்கள் என்பதையும், அவரவர்களுக்கு, எத்தகைய உதவி எந்தெந்தப் பகுதியில் வேண்டுமென்பதையும் உபாத்தியாயர் தெரிந்துகொண்டு அதன் பிரகாரம் தன்னுடைய பாடத் தயாரிப்பை மாற்றிக்கொள்வதைக் காண்போம். உபாத்தியாயர் வகுப்பில் பேசுவது குறைந்தபோதிலும், பிள்ளைகள் தாங்களே யோசித்து, சிரமப்பட்டு விஷயங்களைத் தெரிந்து கொண்டும், உபாத்தியாயரின் மேற்பார்வையின் கீழ்படித்துக்கொண்டும், இருப்பதைக் காண்போம். தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், எல்லோரும் உபாத்தியாயர் சொல்வதை பொம்மைகள்போல் கேட்டுக்கொண்டிருப்பதை விட இது நேர்த்தியான காரிய நியமிப்பென்றே தோன்றுகிறது. இதிலுள்ள கஷ்டம் கேள்விகளைத் தயார் செய்து, பிள்ளைகளின் தேர்ச்சியை அப்போதைக்கப்போது, குறிப்பதுதான். ஆரம்பத்தில் இது அசாத்தியமான காரியமாகத் தோன்றினும், இம்முறையில் பழக்கம் ஏற்பட்டால் சாதாரணமாகவே இருக்கிறது. என்னுடைய அனுபோகத்திலேயே, சாதாரண லோயர், ஹையர் கிரேட்டு உபாத்தியாயர்கள் இம்முறையை இதரர்கள் கவனித்து மெச்சக்கூடிய ஓர் திறமையுடன், கைக்கொண்டு வந்தார்கள். இம்முறையை இன்னும் அநேக பள்ளிக் கூடங்களில் கையாண்டால், பிள்ளைகள் நிஜமான தேர்ச்சி, யடைவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. மனிதர்களிடமே, புதிய அபிப்பிராயங்களை சுவீகரித்துக்கொள்ளும் விஷயத்தில் மனதில் அச்சம் ஏற்படுவது சகஜமாக இருக்கிறது. புதிய அபிப்பிராயங்கள் எத்தகையவையோ, அவைகளை அனுசரித்தால் என்ன கஷ்டங்கள் ஏற்படுமோ, என்று ஓர் அச்சத்தினால் பழைய முறைகள் என்ன அதிருப்திகரமானவையாயிருப்பினும் மனிதர்களிடம் ஊர்ஜ்ஜிதப்படுகின்றன. ஆனால், "பழையன கழிதலும், புதியன புகுதலும், பண்பிர்க்கிபல்பு" அல்லவா.? அந்தந்த காலத்தின் தன்மையை ஒட்டி நம்முடைய அபிப்பிராயங்களையும், ஏற்பாடுகளையும் நாம் மாற்றிக்கொள்ளாவிடில் 'முற்போக்கு' என்பதில்லாமற்போய்விடுகிறது, முக்கியமாக கல்வி நிலயங்களிலும், உபாத்தியாயர்களிடமும், இம்மாதிரியான மனோ பாவம் வருவது வெகு துர்லபமாகவே இருந்து வருகிறது. ஓர் ஜன சமூகத்தின் முற்போக்குக்கு காரண பூதர்களாக இருப்பவர்கள் உபாத்தியாயர்கள்தான். அவர்கள் இத்தகைய முற்போக்கான அபிப்பிராயங்களையும் காரிய நியமிப்பையும் அனுசரிப்பதே முறை.

செய்தித் திரட்டு

கல்விவாரக் கொண்டாட்டம்

(1) திருச்செங்கோடு தாலுகா, மோடமங்கலம்

மோடமங்கலம் போர்டு ஆண் பாடசாலையும், தண்ணீர் பந்தல் பாளையம் போர்டு பெண் பாடசாலையும் சேர்ந்து 10—10—41-ல் மாணவ மாணவிகள் கூடி கல்வி வாரத்தைக் கொண்டாடினர். சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. Regis Swamikannu, B.A., L.T. தலைமை வகித்தார். கூட்டத்திற்குப் பல பிரமுகர்கள் வந்திருந்தனர். தலைவர் முடிவுரையில் பாடசாலையில் இடவசதி குறைவைப் பற்றியும், பாடசாலை விஷயத்தில் கிராமத்தவர்கள் காட்ட வேண்டிய ஊக்கத்தைப் பற்றியும் விரிவாய் எடுத்துரைத்தார்.

---

(2) தாராபுரம், (கோயமுத்தூர்)

6-10-41 திறப்பாளர்.—ஜனாப் M.S. அப்துல் அஸீஸ் சாகிப் பகதூர், டிஸ்டிரிக்ட் முன்சீப், தாராபுரம்.

சொற்பொழிவு.—கல்வி வாரக் கொண்டாட்டத்தின் நோக்கங்கள் —ஸ்ரீ S. சுந்தரேசய்யர், டிப்டி இன்ஸ்பெக்டர், தாராபுரம்.

7-10-41 தலைவர்.—Sri A.K. ராகவன், கமிஷனர், தாராபுரம் முனிசிபாலிடி.

சொற்பொழிவு.—ஜனநாயக சமூகத்தில் பாடசாலைகளின் வேலைகள்—ஸ்ரீ R. ராமகிருஷ்ணய்யர்.

8-10-41 தலைவர்.—ஸ்ரீ K.S. ஸ்ரீனிவாசய்யர், ஹெட்மாஸ்டர்.

சொற்பொழிவுகள்.—(1) முதியோர் கல்வியும் அதற்குத் திட்டம் நிர்மாணித்தலும் Sri. G.T. ஈசையா, Sri. A.K. ராகவன்.

(2) பள்ளிக்கூட விஷயங்களில் மாணவர்கள் பொறுப் பேற்றல் —ஸ்ரீ D. மோசஸ்.

9-10-41 தலைவர் —டாக்டர் E.M. லிட்டில்.

சொற்பொழிவு.—பிள்ளைகளிடத்து ஆரோக்கியத்தை விருத்தி செய்ய பள்ளிக்கூடங்கள் செய்யக் கூடியவை.—ஸ்ரீ N பாண்டியன்.

10-10-41 தலைவர்.—ஸ்ரீ K. முத்துசாமி கௌண்டர், B.A., B.L,

சொற்பொழிவுகள்.—(1) பாடசாலைக் குழந்தைகளை பீடிக்கும் சாதாரண வியாதிகளும் அவற்றிற்குச் சிகிச்சைகளும். டாக்டர் மிஸ் மேரி வர்க்கி.

(2) இஷ்டத் தொழில்களும் அவைகளின் அவசியமும். ஓய்வு நேரங்களை சரியாக உபயோகித்தல். ஸ்ரீ C. S. முத்தையா.

11-10-41 தலைவர்.—**Mrs. M. Briant, Sub Asst. Inspectress of Girls Schools.**

சொற்பொழிவு.—குழந்தைகளை பராமரிப்பதில் பெற்றோர்களின் பொறுப்பு—ஷை விஷயத்தில் வீட்டிற்கும் பள்ளிக்கூடத்திற்கும் சம்பந்தம். **Miss. Thangam Samuel and Mr G.T. Isaiah, B.A., L.T.**

---

(3) பாபிரெட்டிப்பட்டி, (சேலம்)

6-10-41 முதல் 11-10-41 வரை கொண்டாடப்பட்டது.

அச்சமயம் கல்வி சம்பந்தமான ஒரு பொருட் காட்சி சாலை திறந்துவைக்கப்பட்டது. கடைசி தினம் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ A. மாரிமுத்து அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. "ஆரம்பக் கல்வி அபிவிருத்தி" என்னும் விஷயத்தைப் பற்றி தலைவர் உபன்னியசித்தார்.

---

(4) போர்டு பெண் பாடசாலை, உடையார் பாளையம் (திருச்சி)

6-10-41 தலைவர்.—ஸ்ரீ M.S. பால். தலைமை ஆசிரியை Mrs. ஜயஜோதிபால் கல்வி வாரத்தின் அவசியத்தையும் பெற்றோரின் ஒத்துழைப்பையும் பற்றி உபன்னியாசித்தார்.

7-10-41 கல்விப் பாட்டுகளுடன் ஊர்வலம்.

8-10-41 தலைவர்.—ஸ்ரீ V. வில்லியம், ஹெட்மாஸ்டர் லால்குடி கும்மி, கோலாட்டம், டான்ஸ முதலியன.

ஹெட்மாஸ்டர் ஸ்ரீ K. V. பாலசுப்ரமணிய முதலியாரவர்களால் மாணவிகளின் வேலைப் பொருள் காட்சி திறந்து வைக்கப்பட்டது.

9-10-41 தலைவர்.—ஸ்ரீ சீனிவாசாச்சாரியார், ஹெட்மாஸ்டர், உபன்னியாசம்—'மாணவர் சுகாதாரம்'—ஸ்ரீ O.A. முத்துசாமி அய்யர்.

11-10-41 தலைவர்.—ஸ்ரீ B. நடராஜ பிள்ளை, பெற்றோர் சங்கத் தலைவர்.

உபன்னியாசம்—'பெண் கல்வியின் அவசியம்' 'பெற்றோரின் கடமை', 'ஆசிரியரின் கடமை'—தமிழ் சங்கக் காரியதரிசி ஸ்ரீ L. G. சுந்தரராஜுலு நாயுடு.

மாணவ மாணவிகளால் கும்மி கோலாட்டம் முதலியன. உடையார்பாளையம் சமஸ்தானாதிபதியவர்களின் பொருளுதவியின்பேரில் மாணவ மாணவிகளுக்கு வெகுமதிகள் அளிக்கப்பட்டன.

இக்கொண்டாட்டத்தின் பயனாக பல புதிய மாணவிகள் பாடசாலையில் தாக்கல் செய்யப் பட்டனர்.

(5) ஹரூர் (சேலம் ஜில்லா)

10-10-41, 11-10-41, இவ்விருதினங்களிலும் கல்வி விளக்கப் பழமொழிகளுடன் மாணவர்களும் உபாத்தியாயர்களும் ஊர்வலம்.

10-10-41 அங்கங்கே பொது ஜனங்களின் கூட்டம் கூட்டப்பட்டு கல்வி வாரத்தின் நோக்கத்தைப் பற்றியும், கல்வி சம்பந்தமாயும் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ A. மாரிமுத்து அவர்களும், ஸ்ரீ S.N. கோபால கிருஷ்ணய்யரும் சொற்பொழிவு செய்தார்கள்.

11-10-41 தாசில்தார் ஸ்ரீ ராமசந்திரன் அவர்கள் தலைமையில் கூட்டம் கூடி ஸ்ரீ வேணுகோபால் நாயுடுவும், ஸ்ரீ S N. கோபாலகிருஷ்ணய்யரும் கல்வி சமபந்தமான, சொற்பொழிவுகள் நடத்தினார்கள். குழந்தைகளுக்குத் தின்பண்டம் வழங்கப்பட்டது.

தலைமை ஆசிரியர் ஸ்ரீ T. M. முனிசாமி செட்டியார் அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

---

(6) வீரவ நல்லூர், (திருநெல்வேலி)

9-10-41-தலைவர்—ஸ்ரீ V. நாயினார் செட்டியார்

சொற்பொழிவு—கல்வி வாரத்தின் இன்றியமையாமை

—ஸ்ரீ. H. சப்தரிஷி—மாணவ மாணவிகளால் ஒழுக்கம் மத ஒற்றுமை, கல்வியின் சிறப்பு முதலியன பற்றி சொற்பொழிவும், புத்தர் அக்பரும் பீர்பாலும் என்ற நாடக சம்பாஷணையும்.

10-10-41—தலைவர்—ஸ்ரீ S. சபாபதி. B A.

சொற்பொழிவு—' நற்புத்தகமே நற்றோழன் '—ஸ்ரீ P. S. கிருஷ்ணய்யர். மாணவிகள் கல்வி சம்பந்தமான கும்மி கோலாட்டம். 8 வயது மாணவர்கள் திருக்குறள் பாயிரம் ஒப்பித்தல்.

11-10-41—தலைவர்—ஸ்ரீ V. S. N சுப்பிரமணியன் செட்டியார், மானேஜர்.

கல்வி சம்பந்தமான வாக்கியங்களடங்கிய வர்ணப்படங்களுடனும் கொடிகளுடனும் ஊர்வலம்.

மாலை தலைவர்—ஸ்ரீமதி ஸரோஜா தேவி.

சொற்பொழிவு—பெண் கல்வி—ஸ்ரீமதி மங்கையர்க்கரசி அம்மாள்.

சிறு பெண்களின் கல்வி, சுகாதாரம், சம்பந்தமான பாட்டுகள் மேல் வகுப்பு மாணவிகள் நடிப்பு, சம்பாஷணை, பரத நாட்டியம்.

12-10-41—தலைவர்—ஸ்ரீ P. S. கிருஷ்ணய்யர்.

சொற்பொழிவு—கடவுள் பக்தி—ஸ்ரீ V. முத்துசுவாமி அடவியார்

திருக்குறளின் சிறப்பு, திருவள்ளுவரின் மாண்பு பற்றிய சொற்பொழிவுகள்—மாணவ மாணவிகள்.

சங்கீதக் கச்சேரி—ஸ்ரீ V. சுப்பையா நு கோஷ்டியார்.

(7) பட்டுக்கோட்டை—(தஞ்சாவூர்)

தஞ்சை ஜில்லாபோர்டு தலைவர் ஸ்ரீ V. நாடிமுத்து பிள்ளை M. L. A., அவர்கள் விடுத்துள்ள அறிக்கைப்படி பட்டுக்கோட்டை போர்டு ஆரம்ப ஆசிரியர் ஆசிரியைகளால் கிராமச் சீரமைப்பு விழா 10-10-41 லிருந்து 14-10-41 வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவை போர்டு இஞ்சினியர் ஸ்ரீ ஷெனாய் அவர்கள் திறந்து வைத்தார். கல்வி, சுகாதாரம், விவசாயம், கால் நடை, குடிசைத் தொழில், கூட்டுறவு நாள் முதலியன பற்றி அந்தந்த இலாகாப் பிரமுகர்களால் சொற் பொழிவுகள் நடந்தன. கடைசி நாளன்று பெண் பாடசாலையில் Mrs. நாடிமுத்துப் பிள்ளை தலைமையில் ஸ்திரீகளின் பெரிய கூட்டம் ஒன்று நடைபெற்றது. Mrs. சீனிவாசய்யர் சொற்பொழி வாற்றினார்கள். மாணவிகளுக்குப் பரிசு வழங்கப்பட்டது.

ஆண் பாடசாலையில் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் ஸ்ரீ V. குமரய்யா அவர்கள் தலைமையில் ஒரு பெரிய கூட்டம் நடந்தது. மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. ஐந்து நாட்களிலும் போர்டு பெண் பாடசாலை மாணவிகள் அபிநயப் பாட்டினாலும் சங்கீதத்தினாலும் பொது ஜனங்களை மகிழ்விக்கச் செய்தது மிகவும் பாராட்டத் தக்கது.

---

(8) பஞ்சாயத்து ஆசிரியர்களின் யூனியன், ராசிபுரம் (சேலம்)

12-10-41 ல் ஷை யூனியன் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ ரவீந்திரர் மரணத்தைக் குறித்து அனுதாபம் தெரிவித்துக் கூட்டம் இரண்டு நிமிஷம் ஒத்தி வைக்கப்பட்டது.

யூனியன் தலைவர் ஸ்ரீ S. ராமசுவாமி அவர்கள் யூனியன் விஸ்தரிப்பைப் பற்றி விரிவாகப் பேசினார். காரியதரிசி ஸ்ரீ K. A. ரங்கசாமி அவர்கள் ஆங்காங்கு சப் கமிட்டிகளை நியமித்து யூனியனை விஸ்தரித்தும், பலப்படுத்தவும் வேண்டுமென்றும், இந்த யூனியனை ஜில்லா யூனியனாகச் செய்ய வேண்டுமென்றும் பேசினார். இதை ஆமோதித்து ஸ்ரீ ஜேம்ஸ் N. செல்வ தாஸ். ஜில்லா யூனியனுக்குவதால் ஏற்படும் பலனை இன்னும் விரிவாகப் பேசினார். பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

---

(9) ஹிந்துஸ்தான் சாரண சங்கம், பழைய வத்தல குண்டு.

19-10-41 மாலை, 'பாரதி குருளையர்' ஜில்லாஸ்கௌட் மாஸ்டர் ஸ்ரீ ராமகிருஷ்ணன் அவர்களுடன் இடமலைக் காட்டிற்குச் சென்று சாரணர் கொடி ஏற்றி சில விளையாட்டுகள் நடத்தினர். இந்த உல்லாசப் பிரயாணத்தில் ஓட்டுப் பட்டி இனும்தார் ஸ்ரீ K. S. ராமமூர்த்தி,

B.S. முத்துசாமி, R. தண்டபாணி முதலியோர் கலந்து கொண்டு குருளை யருக்கு நல்ல உபதேசங்கள் கூறினர். பிறகு குருளை ஆசிரியர் ஸ்ரீ N. ராமன் எல்லாருக்கும் வந்தனோபசாரம் கூற எல்லாரும் அவரவர் இருப்பிடம் சென்றனர்.

---

(10) போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை ஸரஸ்வதி மாணவர்கழகம், வேம்பார்க்கம். (வட ஆற்காடு)

17-10-41 ஷை கழகத்தின் ஆண்டு விழா நடைபெற்றது. ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் ஸ்ரீ V. R. கிருஷ்ணசாமி அய்யர், M.A. தலைமை வகித்தார். பல கனவான்கள் விஜயம் செய்தனர். 'பொறுமை' என்பது பற்றி மாணவர்கள் வியாசம் படித்தனர். தலைவர் முடிவுரையில், திருக்குறளினின்றும், புராணங்களிலிருந்தும் பல பாக்களை எடுத்துக் கூறி பொறுமை மானிடர்க்குறிய ஓர் உயர் குணம் என்றும் அதை சிறு பிராயம் முதல் அப்பியசிக்க வேண்டுமென்றும் கூறினர். மாணவர்கள் வாரந்தோறும் இம்மாதிரி சங்கங்களில் பேசுவதால் நல்ல பாஷா ஞானமும், வாக்கு வன்மையும் பெறக்கூடும் என்றும் கூறினர். மாணவர்கள் பக்தி பாக்கள் பல பாடினர். தலைமை ஆசிரியர் ஸ்ரீ V. கிருஷ்ணசாமி அய்யங்கரர் வந்தனோபசாரம் கூற தேசிய கீதத்துடன் முடிவுற்றது.

---

(11) உதவிபெறும் பாடசாலை ஆசிரியர்களின் யூனியன். குலசேகர பட்டணம், (திருநெல்வேலி)

25-10-41 ஷை சங்கத்தின் ஆறுவது கூட்டம் நடைபெற்றது. சுமார் 70 ஆசிரியர்கள் விஜயம் செய்தனர். யூனியன் பிரசிடெண்டு Rev. Fr. T. வில்லவராயர் தலைமை வகித்தார்.

குருக்காட்டூர் ஸ்ரீ அகரையா சாலமன் அவர்கள் 'ஆரம்பக்கல்வியில் தேக்கம் (Stagnation)' என்பது பற்றி விரிவாகப் பேசுகையில் கிராமங்களின் தற்கால நிலையில் கட்டாயக் கல்வியாலன்றி தேக்கம் என்ற குறையை ஒழிப்பது இயலாது என்றும், வீணில் மானேஜர்களையும், ஆசிரியர்களையும் குறைகூறுவதோ கிராண்டு வெட்டு மூலம் தண்டிப்பதோ வியாதிக்கேற்ற மருந்தல்ல வென்றும் கருத்துப்பட மிக அழகாகப் பேசினர். பல உறுப்பினர்கள் இதை அடுத்து மொழிந்தார்கள்.

பிறகு இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) எட்டாம் வகுப்பு அரசாங்கப் பொதுப் பரீட்சைக்கு ஏற்பட்டுள்ள பாட திட்டம் மிகவும் அதிகமென இந்த யூனியன் கருதுவதால் அதைக் குறைக்கும்படிக்கும், சரித்திரம், பூகோளம், சிவிக்ஸ் இம் மூன்று பாடங்களையும் ஒரே பேப்பரில் சோதனை செய்வதால் மாணவர் களுக்கு ஏற்படும் சிரமத்தை நீக்கும்பொருட்டு இம்மூன்று பாடங்களை

யும் தனித்தனியாகப் பரிசோதிக்கும்படி இந்த யூனியன் கல்வி இலாகா டைரக்டரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) ஷ பொதுப் பரீட்சைக்கு 6, 7-வது வகுப்புக்களின் பாட திட்டத்தையும் சேர்ப்பதால் மாணவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தைக் கருதி இவ்வருஷம் எட்டாவது வகுப்புப் பாடதிட்டத்தையும் அதற்கு மறுவருஷம் 6, 7, 8 வகுப்பு பாடதிட்டத்தையும் தழுவி பரிசோதிக்க வேண்டுமென்று இந்த யூனியன் கல்வி இலாகா டைரக்டரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

---

(12) ஆரம்ப ஆசிரியர் கழகம். வேலூர். (சேலம்)

25-10-41 ல் ஜனப் K. M. காதர்பாக்ஷா சாகிப், B.A., L.T., ஜூனியர் டிபுடி இன்ஸ்பெக்டரது தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. பல நிகழ்ச்சிகட்குப் பின் தலைவர் தற்காலம் நடக்கும் உலகச் சண்டையைப் பற்றிக் கூறிவிட்டு, ஆசிரியர்கள் தங்கள் கிராமவாசிகளுக்கு இதைத் தெளிவாக எடுத்துக் காட்டி சண்டைக்குப் பல வழிகளிலும் உதவி செய்யும்படி பிரசாரம் செய்யக் கேட்டுக்கொண்டார். பிறகு யுத்தநிதிக்கு ரூ. 5 நன்கொடையாக அளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

---

(13) நிலக்கோட்டை தாலூகா ஆரம்ப ஆசிரிய ஆசிரியைகள் மகாநாடு, (மதுரை ஜில்லா)

26-10-41 ல் ஷ மகாநாடு கோடைக்கானலில் நடைபெற்றது. ஜில்லாபோர்டு வைஸ்பிரசிடெண்டு ஸ்ரீ G. வெங்கடாசலபதி அவர்கள் தலைமை வகித்தார்.

ஸ்ரீ E. S. கோவிந்தனும், ஸ்ரீ R. நாராயணசாமியும், முறையே 'ஆசிரியர்கள்' 'என் செய்தி' என்பன பற்றிப் பேசினார்கள். தலைவர் உரையில் ஒவ்வொரு ஆசிரியரும் 'உன் கடமையைச் செய்' என்னும் கொள்கையைக் கையாளும்படி உபதேசித்தார்.

காலையில் யூனியன் தலைவர் ஸ்ரீ D. வில்லியம் அவர்கள் தலைமையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

(14) ஆரம்ப ஆசிரியர் சங்கம், கீழ்ச்சீவல்ப்பட்டி

10-10-41 ல் இச்சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழா நடைபெற்றது. கோனாபட்டு ஸரஸ்வதி ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ A. K. கிருஷ்ணசாமி அய்யர், M.A., L.T., அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் முகவுரையில் ஆசிரியர்களின் தன்மை என்பதைப்பற்றி பகவத்கீதா சுலோக மேற்கோள்களுடன் விரிவாக எடுத்துரைத்தார். மாலையில் புதுக்கோட்டை மகாராஜா கல்லூரி உதவி ஆசிரியர் ஸ்ரீ V. K. ராஜகோபாலய்யர் அவர்கள் 'கிராமத்தில் பள்ளிக்கூடத்

தின் முக்கியம்' என்பது பற்றியும், அதைப் பின்பற்றி ஸரஸ்வதி ஹைஸ்கூல் உதவி ஆசிரியர் ஸ்ரீ M. ராமசந்திரய்யர் அவர்களும் விரிவாக எடுத்துரைத்தார்கள். காரியதரிசி ஸ்ரீ G. சுவாமிநாதய்யர் வந்தனோபசாரம் கூற விழா இனிது முடிந்தது.

---

(15) ஜில்லா போர்டு ஆரம்ப பாடசாலை பெற்றோர் சங்கம், தண்டலம், (செங்கல்பட்டு ஜில்லா)

27-10-41 ல் ஸ்ரீ சின்னப்பா முதலியார் அவர்கள் தலைமையில் இச்சங்கம் கூடிற்று. கிராமத்தார்களில் பலர் வந்திருந்தனர். உதவி ஆசிரியர் ஸ்ரீ V. தேப்பெருமாள் பிள்ளை 'கல்வியும் பெற்றோர் கடமையும்' என்பது பற்றியும் அதைப் பின்பற்றி ஸ்ரீ K. கோவிந்தசாமி முதலியார், ஸ்ரீ A. குப்புசாமி முதலியர், ஸ்ரீ K. தர்மலிங்க முதலியார் இவர்களும் பேசினார்கள். பிறகு தலைமை ஆசிரியர் ஸ்ரீ T. ராமசாமி முதலியார் வந்தனோபசாரம் கூறினார்.

---

(16) செங்கல்பட்டு ஜில்லா போர்டு ஆசிரியர்களின் தூதுகோஷ்டி

21-10-41 காலையில் ஏழு தாலூகாக்களின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுகோஷ்டி ஸ்ரீ P. T. ஜகன்னாத அய்யங்கார் அவர்கள் தலைமையில் கனம் டிப்டி டைரெக்டர் அவர்களைப் பேட்டிகண்டனர்.

டைரக்டரவர்களுக்குச் சமர்ப்பித்த மெமோரியலை ஏற்று 22 நிமிஷநேரம் ஆசிரியர்களின் குறைகளை அமைதியுடன் கேட்டுவிட்டு, ஆசிரியர்களின் சர்வீஸுக்குத் தக்கபடி சம்பளம், சம்பளவெட்டை உடனே 1-4-41 லிருந்து நீக்கல், யுத்த அலவன்ஸ் கொடுத்தல், பள்ளிக்கூட நாட்களை 200 ஆகவும், தினசரி நேரத்தை 5 மணியாகவும், மாற்றுதல் முதலியவைகளை நிறைவேற்றி வைப்பதில் தம்மாலான உதவியைச் செய்வதாக வாக்களித்தார்.

பின்னர் தூதுகோஷ்டியார் மேற்படி விஷயங்களை கனம் ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்களிடம் தெரிவித்து அவரையும் சாதகமான பதில் அளித்து உதவும்படி கேட்டுக்கொண்டனர்.

EXTRACTS FROM THE FORT ST. GEORGE GAZETTE
(Part I-B.)

Amendments to the Madras Educational Rules.

(G. O. Ms. No. 1603, Education, dated 15—10—1941).

No. 211.

Amendments.

1. In sub-rule (*b*) of rule 92, for the word "parent" wherever it occurs, the word "parents" shall be substituted.

2. In Appendix 18, for items 5 and 6 the following shall be substituted.—

"5. Salary drawn by the parent (or parents, when both are earning members) or guardian.

6. Annual income of the parent (or parents, when both are earning members) or guardian from sources other than salary."

3. In Appendix 19, the following shall be added to item V :—

"When both the parents are earning members, particulars in respect of both should be given."

(Gazette, page 786, of 21—10—41).

Amendment to the rules relating to the transfer of teachers in elementary schools under District Boards.

No. 240.

(G. O. No. 1535, Education, dated 3—10—1941).

Amendment.

In sub-rule (3) of rule 1 of the said rules in the second paragraph the following words shall be omitted, namely ;—

"or for slackness of work or misconduct on his part."

(Gazette, page 805, of 28—10—41).

(G. O. Ms. No. 1699, Education, dated 1—11—1941).

No. 252.

In Appendix 20-A to the Madras Educational Rules, the following shall be inserted below the last sentence and above the place provided for signature :—

"His/Her age is years according to his/her own statement and by appearance years. I certify that he/she has marks of small pox vaccination. Personal marks of identification.

(1)
(2)
(3)

(Gazette, page 826, of 11—11—41.

பத்திராதிபர் குறிப்பு

ஆற்றலா, ஆவேசமா ?

கோயமுத்தூர், மங்களூர் ஜில்லாக்களில் 25 சதவீதம் பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் இல்லாத காரணத்தைக் கொண்டு அநேக போர்டு பாடசாலைகளை மூடும்படி கல்வி இலாகா அதிகாரிகள் உத்திரவிட்டது நமது வாசகர்களுக்குத்தெரிந்திருக்க லாம். இவ்வுத்திரவினுல் அந்த ஜில்லாக்களில் எவ்வளவு கலவரம் ஏற்பட்டதென்பதும் தெரிந்த விஷயமே. சென்ற மாதத்தில் தென்னுற்காடு ஜில்லாவிலுள்ள போர்டு பாடசாலைகளில் 250 சுமார்னின்றும் கல்வி இலாகாவின் அங்கீகாரத்தை எடுத்துவிடப் படுமென்று உத்திரவிட்டிருக்கிறுர்களாம். இம்மாதிரி ஒவ்வொரு ஜில்லாவிலும் பல நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்களை மூடிவிட லாம். நல்ல சுகாதார வசதிகளுள்ள கட்டிடம் இல்லாமலும், சரி யானக் கல்வி உபகரணங்கள் இல்லாமலும். பயிற்சிபெற்ற ஆசிரி யர் இல்லாமலும் இருந்தால் பள்ளிக்கூடங்களை மூடப்படவேண்டு மென்ற உத்திரவைக் கல்வி இலாகா அதிகாரிகள் பிறப்பித்தால் அதை எல்லோரும் ஆதரிப்பார்கள். ஏராளமாகப் பணத்தைச் செலவழித்து நல்ல கட்டிடங்களும், விளையாடுமிடங்களிருக்கும் பள்ளிக்கூடங்களையும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கும் பள்ளிக்கூடங்களை மூடுவதென்ருல் அதற்குப் போதுமான கார ணங்கள் வேண்டும். மூடவேண்டுமென்று சொல்லும் இப்பள்ளிக் கூடங்களில் போதுமான பிள்ளைகளும் படித்து வருகிறுர்கள். அப்படி யிருக்க, 25 சத வீதம் பெண் பிள்ளைகள் இல்லை என்ற ஒரு காரணத்தைக் கொண்டு, இப்பள்ளிக்கூடங்களை மூடும்படி யான உத்திரவு கல்வி முன்னேற்றத்தை உண்டாக்காது என்பது நிச்சயம்.

பெண் கல்வி அவசியம். பிள்ளைகளின் கல்வியைவிடப் பெண் கல்வி அவசியம். ஆகவே பெண் கல்வியின் முன்னேற் றத்திற்கு முழு மனதுடன் நமது கல்வி இலாகா பாடுபடுவது மிக

வும் பாராட்டத் தக்கது. ஆனால் பெண் கல்வி அபிவிர்த்தி ஆற்றலை நல்ல வழியில் திருப்புவது நாட்டுக்கு நலனை உண்டாக்கும். ஸ்தலஸ்தாபன அதிகாரிகளை மிரட்டுவதினால் காரியம் சீக்கிரத்தில் நடைபெறாது. அவர்களிடம் பெண் கல்வி ஆற்றலை யுண்டாக்க வேண்டும். பெண்கள் பள்ளிக்கூடங்களுக்கு வருவதற்கு வேண்டிய பிரசாரம் செய்யவும், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைப் பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்தவும் வேண்டும். அப்படி இல்லாமல், ஒரு விதியை நினைத்தமாத்திரத்தில் ஏற்படுத்தி அவ்விதியின்படி இல்லாத பள்ளிக்கூடங்களை மூடு என்று உத்திரவிடுவது ஆவேசங் கொண்ட செய்கையாகுமே யொழிய, பெண் கல்விக்கான உண்மையான ஆதரவு அளிக்கும் ஆற்றலைக் காண்பிப்பது ஆகாது. இது விஷயமாக தென்னாற்காடு ஜில்லாபோர்டு தலைவர் எழுதியுள்ள குறிப்பை அதிகாரிகள் நன்கு ஆலோசித்துப் பெண் கல்வி முன்னேற்றத்திற்கேற்ற சீரான திட்டங்களை உண்டாக்குவார்கள் என்று நம்புகிறோம்.

<u>மதிப்புரை</u>

இந்திய ஆரம்பப்பெண் பள்ளிக்கூடங்களுக்குரிய தேகப் பயிற்சிப் போதனைதிட்டத்தின் விவரம்

பிரசுரகர்த்தர்: ஆக்ஸ் போர்ட் யுனிவர்ஸிடி ப்ரஸ், சென்னை மிஸஸ் ஹெச். ஸி. பக். எம். ஏ. இயற்றியது. மிஸஸ் ஏ. காந்திமதியால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. (186-பக்கங்கள் கொண்டது.)

தேகப் பயிற்சியின் அவசியம் எல்லோருக்கும் தெரிந்ததே. நம் நாட்டில் பள்ளிக்கூடங்களில் படிக்கும் சிறுமிகள் மிக பலவீனமா யிருப்பதை எல்லோரும் அறிவர். இப் பள்ளிக்கூடங்களில் தேகப் பயிற்சி திட்டம் சரியானபடி அமைந்திராததாலும் சிறுமிகளின் தேகப் பயிற்சியைப்பற்றி போதிய கவனம் செலுத்தாததுமே இந் நிலைக்குக் காரணம். எனவே, ஆரம்பப் பெண் பள்ளிக்கூடங்களுக்குரிய தேகப்பயிற்சிப் போதனை திட்டத்தின் விவரம் என்னும் இச் சிறு புத்தகம் மிகவும் பிரயோசனமாயிருக்கும் என்று நம்புகிறோம். இப் புத்தகம் "தேகப் பயிற்சி போதனை எவ்வாறு பிள்ளைகளை சந்தோஷத்துடனும் தேக ஆரோக்கியத்துடனும் மற்றவர்களுக்கு உதவக்கூடியவர்களாக இயங்கும்படி வளர்க்க உதவும் என்பதை ஆசிரியை எடுத்துக் காட்ட முயலுகிறார்" இதில் ஏழு அத்தியாயங்கள் உள்ளன. முதல் அத்தியாயத்தில் பெண்களின் தேகப் பயிற்சிப் போதனை திட்டத்தைப்பற்றிய விதிகளை விவரித்து எழுதப்பட்டிருக்கிறது. 3, 4, 5 அத்தியாயங்களில் முறையே 5 முதல் 7, 7 முதல் 9, 9 முதல் 11 வயதான பெண்களுக்குகேற்ற விளையாட்டுகளும் விளையாட்டு முறைகளையும் பற்றிய விவரங்கள் எழுதியுள்ளார். இப்பாட திட்டங்களுக்கு வேண்டிய உபகரணங்களைப் பற்றியுள்ளது ஏழாம் அத்தியாயம்,

இப்புத்தகம் ஆரம்ப பெண் பாடசாலைகளுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும் எளிய நடையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.